www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

பிப்ரவரி - 2001
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



தோழர். செல்வராசு :
ஒரு தியாகம்
உருவான பாதை



# இசை: களியாட்டமா? போராட்டமா?

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் கடிதம்

★ தமிழ் மக்கள் இசைவிழா நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் நன்றாக இருந்தன. 'சிதம்பர ரகசியம்' என்ற தலைப்பில் பேசப்பட்ட கருத்துக்களை 'புதிய கலாச்சாரம்' ஏட்டில் முழுமையாக வெளியிட கேட்டுக் கொள்கிறேன்.

**— வே. பால்ராசு, தூத்துக்குடி.**

★ 6.1.2001 தமிழ் மக்கள் இசைவிழா நிகழ்ச்சிகள் பார்த்தேன். தமிழை அமுதென்றும், போர்வாளென்றும் சித்தரித்தார் பாவேந்தர். இசையையும் ஆயுதமாக மாற்றி, உழைக்கும் மக்களுக்கு எதிராகக் கட்டமைத்துள்ள சமூக அமைப்பை உடைத்தெறியவும் பயன்படுத்தலாம் என்பதை ம.க.இ.க. இசைக் குழு தோழர்கள் அற்புதமாகச் சித்தரித்தார்கள். இனிமையான பாடல்கள்; ஆவேசம்; உணர்ச்சிக் கொந்தளிப்பு - இவை பார்வையாளரைத் தட்டி எழுப்புவதாக உள்ளது. மூன்றே வயது நிரம்பிய நஜ்மாவின் பாவேந்தர் பற்றிய தெளிவான ஆவேச உரை நெஞ்சை விட்டு அகலாது.

**— மா. நடராசன், அறந்தாங்கி.**

★ ஜெயகாந்தனை ஜெயமோகனிடம் இருந்து சற்று பிரித்துப் பார்த்துத் திறனாய்வு செய்தால் கொஞ்சம் சரியான முறையில் அமையுமெனக் கருதுகிறேன். மேலும் ஜெயகாந்தன் தொடக்க காலத்தில் எழுதிய சிறுகதை, புதினம், கட்டுரைகள் போன்றவை ஓரளவு மார்க்சிய அடிப்படையில், எதார்த்தத்தன்மை கொண்டதாக அமைந்து காணப்படும்... முதலில் ஒருவரைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு முன் அவரைப் பற்றிய சிறப்புத் தன்மைகள் மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களை முதலில் கூறி பின்பு அவரைப் பற்றிய முரண்பட்ட கருத்துக்களை எடுத்தியம்புவது சிறப்பான மதிப்பீடாக இருக்குமெனக் கருதுகிறேன். இதுபோன்ற அடிப்படையிலேயே நான்கு வருடங்களுக்கு முன் தந்தை பெரியாரைப் பற்றி விமரிசனம் செய்தீர்கள். தங்கள் மதிப்பீடுகள் சரியான, முறையான அமைப்பு கொண்டு காணப்பட்டாலும், சமூகத்துக்கு உடன்பட்ட அவர்கள் கருத்துக்களை முதலில் கூறி, பின்பு முரண்பட்ட கருத்தை வெளிக்கொணரச் செய்வது சிறப்புடையதாக இருக்கும்.

**— வே. கணேசமூர்த்தி, பரமக்குடி.**

★ கோடீஸ்வரன் கட்டுரையில் கச்சிதமாக இருந்தது 'வை ராஜாவை'. எத்தனையோ விளம்பரதாரர்களின் நிகழ்ச்சிகளில், இதுவும் ஒன்று. 'சித்தி'யைப் போன்று இது இன்னொரு 'செட்' ரசிகர்களைத் திருப்திப் படுத்துகிறது என்கிற பொதுவான விவாதத்திற்கு இந்த பெட்டிச் செய்தி தெளிவான பதிலைத் தருகின்றது. பண்பாட்டுத் துறையில் இன்றைய நடப்பு பிரச்சினையாக மாறி வருகின்ற இந்தச் சூதாட்ட வெறியை உரிய முறையில் 'கோடீஸ்வரனை'க் கொண்டு அம்பலப்படுத்தியிருப்பது மிகவும் அவசியம்.

★ ஜெ.ஜெ. சில குறிப்புக்கள் கட்டுரை சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், ஜெயமோகன் என்று மூவரையும் குறிப்பதாக அமைந்திருப்பது மிகவும் பிரமாதம். முதலாளித்துவ முகாமின் நலனுக்கான பணிகளில் இப்படி நூதனமான சில வேலைப் பிரிவினைகளை வகுத்துக் கொண்டு செயல்படுகிறார்கள் என்பதை மிக நன்றாக அம்பலப்படுத்துகிறது கட்டுரை. தங்களின் முகமூடிகளைப் பிய்த்தெறியவும் ஆட்கள் இருக்கிறார்கள் என்று கட்டாயம் நம்மைக் கண்டு அவர்கள் அச்சமுறுவார்கள். ஜெயமோகன் பற்றி இன்னமும் எழுதுவீர்கள் என்று நம்புகிறேன். தொடரட்டும்.

★ பிரெக்டின் நாடகம், வெறுமனே அறிமுகம் என்பதுடன் நில்லாமல் அறிவுத் துறை சார்ந்த ஒரு கட்டுரையாகவே அமைந்து விட்டது. கலிலியோவின் சுயவிமரிசனத்தைப் படித்தபோது அவரது நிலையின் பால் அனுதாபம் ஏற்படும் முன்னரே மதவாத அயோக்கியர்களின் சாந்தமான முகத்தினை பிய்த்தெடுக்க வேண்டும் என்ற கோபம்தான் வந்தது.

அன்றைய விஞ்ஞானிகள் இப்போதையவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஒரு வரலாற்றுக் கட்டம் என்கிற கண்ணோட்டத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். கட்டுரை அருமை; அந்த நூலைக் கட்டாயம் படித்து விடுவேன்.

**— சிங்காரம், திருச்சி.**

★ அட்டைப்படம் பத்திரிக்கையை வாங்கியவுடனே பளிச்சென இருந்தாலும், முன்பைவிடத் தரமாக இருந்ததாலும் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் அட்டைப்பட ஒளியில் பிரதிபலிக்கும் மனிதர்கள் இருளை நோக்கி இருப்பதைப் படித்தபின் வருத்தத்தை அளித்தது.

**— வர்கீஸ், தஞ்சை.**

★ எட்டப்பன் வேலைகளுக்கு ராஜதந்திரப் பட்டயமா என எள்ளி நகையாடியிருந்த 'கட்டபொம்மன்' மேடை நாடகம் அரசியல் புல்லுருவிகளுக்குப் புதிய கலாச்சாரப் புரட்சியை ஒரு சிம்ம சொப்பனமாகிவிட்டது.

★ கள்ளனுக்கு வாய்த்தவன் போல டி.வி. கோடீஸ்வரன் புதிதாக முளைத்துள்ள அசிங்கத்தை என்ன செய்வது? அப்பாவிப் பொதுச்சனங்களின் அறியாமையால் அமிதாப்பச்சன் போன்ற பணக்காரத் திமிங்கிலங்கள் திமிராட்டம் தொடர்கதையாகிவிட்டது.

**— ஆர்.ஆர். சாமி, திருவண்ணாமலை.**

## இளைஞனே... வா!

*கடன்பட்ட விவசாயிகள்*
*தற்கொலை*
*கதவடைப்பினால் தொழிலாளிகள்*
*தற்கொலை*
*நாட்டின் உயிர்த்துடிப்பே*
*அடங்கிக் கொண்டிருக்கும் நேரமிது.*

*இளைஞனே*
*நிலைக் கண்ணாடியில்*
*எதை ரசிக்கிறாய்*
*எதைக் கனவு காண்கிறாய்?*

*நெருப்பிலும்*
*இறங்கத் துணியும்*
*பருவம்*
*உன் பருவம்.*
*சினிமாக் கவர்ச்சியில்*
*காதல் மயக்கத்தில்*
*தன்னல ஏக்கத்தில்*
*தூம்பிப் போகிறது உன் பருவம்*
*தெரிகிறதா?*

*இளைஞனே*
*நிலைக் கண்ணாடியில்*
*எதை ரசிக்கிறாய்*
*எதைக் கனவு காண்கிறாய்?*

*இந்த மண்ணில் பார்*
*உன் முகத்தை*
*மக்களிடம் தேடு*
*உன் அழகை*

*வா...*
*ம.க.இ.க.வில் இணைந்து கொள்.*

*தியாகமும் பெருமிதமும்*
*ஒளிவீசும்*
*கம்பீரமான வாழ்வை*
*வாழ்ந்து பார்!*

*காத்திருக்க நேரமில்லை*
*இப்போதே*
*இக்கணமே...*

மக்கள் கலை இலக்கியக் கழகத்தில் இணைய விழையும் இளைஞர்கள் தபாலிலும், நேரிலும் தொடர்பு கொள்ள முகவரி:

இரா. சீனிவாசன், 18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 600 083.

அலுவலக நேரம்: காலை 10.00 முதல் 1 மணி வரை.

www.padippakam.com

**கலை இலக்கியம்**
**யாவும் மக்களுக்கே**

- **புதிய கலாச்சாரம்**
- **மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்**

- **போர்: 18**
- **குரல்: 9**
- **பிப்ரவரி - 2001**

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 9**

**சந்தா,**
**படைப்புகள் அனுப்பவும்**
**தகவல்களுக்கும்:**

**இரா. சீனிவாசன்,**
**18, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**

# நிலநடுக்கம்:
# தேசிய சோகமா - தேசிய லாபமா?

லட்சக்கணக்கான மக்களைக் காவு கொண்டிருக்கும் குஜராத் நிலநடுக்கம் ஒரு ஆற்றொணாப் பெருந்துயரம் என்பதில் ஐயமில்லை. ஆனால் துக்கம் அனுசரிப்பது, உதவி நிதி தருவது, முடிந்தால் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவது என்பதற்கு மேல் இதில் நாம் செய்யத்தக்கதும், புரிந்து கொள்ளத்தக்கதும் ஏதுமில்லையா? காரண காரியங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் கண்ணீர் விடுவதற்கு ஒரு தேசியத் துயரமும், களியாட்டம் போடுவதற்கு ஒரு தேசியப் பெருமிதமும், தேசபக்தியும் ஆளும் வர்க்கங்களுக்கு எப்போதுமே தேவைப்படுகிறது. ''அழைக்கிறது தேசம்'' என்று நிவாரண நிதிக்கு விளம்பரம் வெளியிட்டிருக்கிறது தினமணி. வெள்ள நிதி, வறட்சி நிதி, கார்கில் நிதி, இப்போது நிலநடுக்க நிதி. அம்பானி முதல் அன்றாடங்காய்ச்சிகள் வரை அனைவரும் கைகோர்த்து நிற்கும் இந்த நேரத்தில் வேறெதையும் பேசுவது அநாகரீகமாகக் கருதப்படலாம்; தேசவிரோதம் என்றும் குற்றம் சாட்டப்படலாம்.

எனினும் அழிவின் புகைப்படங்களில் உண்மை விகாரமாகத் தெரிகிறது. அழிந்தவையெல்லாம் ஏழைகளின் வீடுகள் அல்லது நடுத்தர வர்க்கத்தினரின் அடுக்குமாடிக் குடியிருப்புகள். மாளிகைகள் இடிந்து பெரும் முதலாளிகள் பலர் நசுங்கிச் செத்ததாக இது வரை தகவல் இல்லை.

குஜராத் ஏற்கனவே நிலநடுக்கத்தால் பாதிக்கப்படாத பகுதியல்ல; நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதிகள் என்று எச்சரிக்கப்பட்ட பகுதிகளில் நாட்டிலேயே முதலிடத்தில் இருக்கிறது குஜராத். பெரும் அழிவை ஏற்படுத்தாத சிறிய நிலநடுக்கங்கள் சமீப ஆண்டுகளில் அவ்வப்போது நிகழ்ந்திருக்கின்றன. உத்தரகாசியில் ஏற்பட்டதைப் போன்ற நிலநடுக்கம் குஜராத்திலும் நடக்க வாய்ப்பு இருக்கிறது என்று ஒரு வல்லுனர் சென்ற ஆண்டு எச்சரிக்கை செய்துமிருக்கிறார். இத்தனைக்குப் பிறகும் அந்தப் பகுதியில் குடியேற்றங்களைத் தவிர்க்கவோ, அடுக்குமாடிகளைத் தடுக்கவோ, நிலநடுக்கம் பாதிக்காத வீடுகளை வடிவமைக்கவோ அரசு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. மாறாக, புயலையும் மழையையும் முன்னறிவதைப் போல நிலநடுக்கம் வரப்போகிறது என்பதை உடனே முன்னறியும் அளவுக்கு அறிவியல் முன்னேறவில்லை என்பதையே சாக்காகக் கொண்டு தன்னுடைய குற்றத்தை மூடிமறைக்கிறது அரசு. அறிவியலால் முன்னறிய முடிந்த புயல், வெள்ளம், வறட்சி ஆகியவற்றால் இதுவரை மடிந்த லட்சக்கணக்கான மக்கள் மரணத்திற்கு எந்த அரசு இதுவரை பொறுப்பேற்றிருக்கிறது? எத்தனை அதிகார வர்க்கத்தினர் இதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? எதுவும் இல்லை. நிறைய நீலிக்கண்ணீர், கொஞ்சம் நிவாரண நிதி - இவற்றைத் தவிர வேறெதையும் மக்கள் கண்டதில்லை.

மாறாக, மரண ஓலமும், கண்ணீரும், பிணவாடையும் வீசும் இந்தச் சுடுகாட்டில் நரிகளை விடத் தந்திரமாகவும், ஓநாய்களைவிட வெறித்தனமாகவும், பிணந்தின்னிகளை விடத் துல்லியமாகவும் இரை தேடுகின்றன ஆளும் வர்க்கங்கள். இந்திய ஆளும் வர்க்கங்களின் குரலான எகனாமிக் டைம்ஸ் நாளேடு, நிலைமையைச் சமாளிக்கத் தனது யோசனைகளை முன்வைத்துள்ளது. அதன் சாராம்சம் இதுதான்:

''நிலநடுக்கத்தால் அழிந்துள்ள அலுவலகங்கள், சாலைகள் - பாலங்கள் போன்ற கட்டுமானங்கள், நிவாரணத் தொகை இவற்றுக்குச் செலவு செய்ய பணத்துக்கு எங்கே போவது? உலக வங்கியிடம் கடன் வாங்கலாம். அதைத் திருப்பி அடைக்க வரி போடவோ, நோட்டடிக்கவோ, பற்றாக்குறை பட்ஜெட் போடவோ முடியாது. இரண்டு சதவீதம் அரசு ஊழியர்களை ஆட்குறைப்பு செய்தால் ஆண்டுக்கு 1500 கோடி மிச்சமாகும். நிலநடுக்க நிவாரணத்துக்காகத் துணை வரி (Surcharge) போடுவதைவிட இதைச் சாக்காக வைத்து அவர்களைக் கழித்துக் கட்டி (discharge) விடலாம்.''

''நிலநடுக்கத்தால் பாதிக்காத வீடுகளை எப்படி இனி கட்டுவது? அரசாங்கமோ அதிகாரிகளோ இதை உத்திரவாதப்படுத்த முடியாது. இனி நிலநடுக்க காப்பீடு (இன்சூரன்சு) செய்யாமல் வீடு கட்டுவது சட்டவிரோதம் என்று ஆக்கிவிட்டால் வீடுகள் உறுதியாக இருக்கின்றனவா என்று இன்சூரன்சு நிறுவனங்கள் பார்த்துக் கொள்ளும். இடிந்தால் அவர்கள்தானே பணம் தரவேண்டும். மேலும் இந்த யோசனையை அமலாக்கினால் இன்சூரன்சு தொழிலும் (தனியார்மய சூழலில்) நன்றாகச் சூடுபிடிக்கும்.''

பொழிப்புரையோ, விளக்கமோ தேவைப்படாமல் குரூரமாக வெளிப்பட்டிருக்கிறது ஆளும்வர்க்கத்தின் புத்தி. தேசிய சோகம் தேசிய லாபமாகிவிட்டது. தனியார்மய உபாசகர்கள் விரும்புவது போல மருத்துவமும் ரயில்வேயும் தனியார்மயமாகியிருந்தால் சென்னையிலிருந்து புறப்பட்ட விசேட ரயிலின் பயணச் சீட்டுக்காக தாலியறுத்திருப்பார்கள்; இடிபாடுகளில் சிக்கி நசுங்கியவர்களின் உறவினர்கள் பணம் கொடுக்க முடியாமல் விழி பிதுங்கிச் செத்திருப்பார்கள். அது நிலநடுக்கத்தைவிடப் பேரதிர்ச்சியாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஓய்வு, பொழுதுபோக்கு இசை ரசனை!

• மருதையன்

"மனிதனின் மனசாட்சியை விலைக்கு வாங்குமளவு என்னிடம் பணம் இருக்கிறது; சர்வ வல்லமை பொருந்திய அமைச்சர்களை ஆட்டி வைக்குமளவு பணம் இருக்கிறது... நான் விரும்பினால் ஓர் பேரழகியை உடைமையாக்கிக் கொள்வேன்; அவளுடைய இதமான அணைப்பை விலைக்கு வாங்குவேன். இவையெல்லாம் உண்மையான இன்பமில்லையா?"

— என்று பால்சாக்கின் கதாபாத்திரமான ஒரு கந்துவட்டிக்காரன் கேட்பான். அது நூறாண்டுகளுக்கு முந்தைய இலக்கியம்.

"ஒரு மாத்திரையின் விலை 20 டாலர். விழுங்கிய 30 நிமிடத்தில் இன்பம்... பேரின்பம். இன்றைய உலகில் நீங்கள் எதையும் விலைக்கு வாங்கலாம். அந்த நாளில் எங்களுடைய பெற்றோரால் இப்படி இன்பத்தை விலைக்கு வாங்க முடியவில்லை" என்கிறான் ஒரு 23 வயது சீன இளைஞன். இது இலக்கியமல்ல, யதார்த்தம்.

எக்ஸ்டஸி (Ecstasy) - இன்று உலகம் முழுவதும் பரவத் தொடங்கியிருக்கும் மாத்திரையின் பெயர். எக்ஸ்டஸி என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் பேரின்பம்.

ரசியாவுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்க 1953-இல் இரகசிய ஆய்வு நடத்திய அமெரிக்க இராணுவம், இந்தியாவைத் தேடிப் புறப்பட்டு அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸைப் போல, பேரழிவுக்குக் குண்டு தயாரிக்க முனைந்தபோது பேரின்பத்துக்கான மாத்திரையைக் கண்டறிந்தது. எம்.டி.எம்.ஏ. என்றழைக்கப்படும் அந்த இரசாயனக் கூட்டுக் கலவைதான் இன்று எக்ஸ்டஸி என்ற பெயரில் மாத்திரையாக அவதரித்துள்ளது.

இம்மாத்திரையை விழுங்கி அது இரத்தத்தில் கலந்தவுடனே மூளையைக் குறிவைத்துப் பாய்கிறது. மனிதனின் மனநிலையைக் கட்டுப்படுத்தும் செரோடோனின் என்ற திரவத்தைச் சுரக்கின்ற மூளையின் செல்களைத் தாக்குகிறது. அந்தச் செல்களைப் பிழிந்து இத்திரவத்தை நரம்பு மண்டலத்தில் பாய்ச்சுகிறது. விளைவு பேரின்பம்!

கஞ்சா, மது உள்ளிட்ட மற்ற போதைப் பொருட்களைப் போலில்லாமல், குழப்பமற்ற இன்பக் கிளர்ச்சியை மட்டுமே அளிக்கின்ற உத்திரவாதம் இந்த மாத்திரையில் இருக்கிறதாம்!

பால்சாக்கின் கந்துவட்டிக்காரனைப் போல பெண்ணையோ, பொருளையோ விலைக்கு வாங்கி நுகர்ந்து அதன் வழியாக இன்பத்தை அடையும் சுற்று வழி இல்லை; பற்றறுத்துப் பேரின்பம் தேடும் சித்தர் வழியும் இல்லை. இது குறுக்கு வழி, சுருக்கு வழி.

30 லட்சம் ஆண்டுகளாக இயற்கையுடனான போராட்டத்தின் விளைவாகவும், சக மனிதர்களுக்கிடையிலான போராட்டத்தின் விளைவாகவும் தனது நரம்பு மண்டலத்தையும், உணர்ச்சிகளையும், பண்பாட்டையும் உருவாக்கிக் கொண்ட மனிதன், பேரின்பத்துக்கான பாதையைத் தேடிக் களைத்த மனிதன் இறுதியாக அதைக் கண்டு கொண்டான் எனச் சொல்வதா? இல்லை.

**எக்ஸ்டஸி எனும் மாத்திரை நரம்பு மண்டலத்தில் தோற்றுவிக்கும் இரசாயன மாற்றம் எப்படி மகிழ்ச்சி எனும் உணர்ச்சியாக மாற்றம் பெறுகிறதோ அப்படியே இசையும் நம்மீது வினையாற்றுகிறது. அதனால் தான் குறிப்பிட்ட சில பாடல்களைக் கேட்கும் ரசிகன், இனம்புரியாத மகிழ்ச்சிக்கோ, மனக் கிளர்ச்சிக்கோ, சோகத்திற்கோ ஆளாகிறான்.**

காதல், வீரம், தியாகம், இரக்கம், துயரம், கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கும், அவற்றைத் தோற்றுவிக்கும் மனித உறவுகளுக்கும் இனி பொருளில்லையா? "எந்த நரம்பைச் சுண்டினால் பேரின்பம்" என்ற அறிவியல் உண்மையைக் கண்டறிவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாகப் பிறப்பெடுத்த பிதற்றல்களா, மனித உறவுகளும் உணர்ச்சிகளும்? ஆம் என்கிறான் இன்பத்தை விலைக்கு வாங்கும் அந்தச் சீன மாணவன்.

பொருள் முதல்வாதத் தத்துவத்தையும், அதன் வழிவந்த பொதுவுடைமைக் கொள்கையையும் மனித இயல்புக்கு விரோதமானது என்றும், மனிதனை சடப்பொருளாகப் பாவிப்பது என்றும் அவதூறு செய்துவரும் முதலாளித்துவ சமூகவியலும், பண்பாடும்தான் மனிதனையும் மனித உணர்ச்சிகளையும் வெறும் சடப்பொருளாகப் பாவிக்கின்றன. "மகிழ்ச்சி என்பது ஒரு மாத்திரைதான்" என்ற அந்த மாணவனின் கூற்று அறிவியல் அல்ல, முதலாளித்துவ சமூகவியல்.

நினைவாற்றலை மழுங்கச் செய்வது இந்த மாத்திரையின் ஒரு பக்கவிளைவு என்கிறார்கள் விஞ்ஞானிகள். தனது சொந்த நாட்டின் அண்மைக் கால வரலாறும், தனது சொந்தப் பெற்றோர்களின் வரலாறும் கூட அந்த மாணவனுக்கு மறந்து விட்டது போலும்!

அவனது பெற்றோர்களும், பெற்றோரின் பெற்றோர்களும் இன்பத்தை விலைக்கு வாங்கிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. சீனாவில் அப்போது இன்பத்தின் பெயர் அபின். 1907-இல் சீன ஆண்களில் 27 சதவீதம் பேர் அபின் அடிமைகளாயிருந்தனர். பிரிட்டிஷாரும், போர்த்துகீசியரும், பிரெஞ்சுக்காரரும் ஆண்டைகளாயிருந்தனர்.

போதைப் பொருள் வழங்கிய புத்துணர்ச்சிக்குப் பதிலாகப் புதிய உணர்வு, விடுதலை உணர்வு அவர்களுக்குள் கிளர்ந்தெழுந்தபோது பிரிட்டிஷாருக்கெதிரான அபினி யுத்தம் தொடங்கியது. அபின் வழங்கிய இன்பத்திற்குப் பதில் யுத்தம் வழங்கிய துன்பத்தையே சீன மக்கள் தமது பேரின்பமாகக் கருதத் தொடங்கிய ரசவாதம் நிகழ்ந்தது. மாபெரும் சீனப்புரட்சி அதனைத் தொடர்ந்தது. இது வரலாறு.

★ ★ ★

மனித வரலாற்றின் தொன்மைக்கால மடமைகளும் அண்மைக்கால மயக்கங்

www.padippakam.com

களும் ஒருங்கே நிலவும் உலகில் நாம் வாழ்கிறோம். வேதகாலத்தின் பேரின்பப் பொடியாகிய கஞ்சாவை இழுத்தபடி கங்கை நீராட வரும் அம்மணச் சாமியார்கள்; லாஸ் வேகாஸின் நடன விடுதிகளில் எக்ஸ்டஸி மாத்திரையை விழுங்கி நடனமாடும் அரை அம்மண மங்கைகள்.

தோலுக்குப் புத்துணர்ச்சி தர நறுமண சோப், கண்ணுக்குப் புத்துணர்ச்சி தர குளுகுளு கண்ணாடி, காதுக்குப் புத்துணர்ச்சியாக இசை, நாவுக்குக் குளிர்பானம் - என ஐம்புலன்களின் வழியாகவும் புத்துணர்ச்சியைத் திணிக்க முயன்று தோற்று, 'ஆறாவது புலனை' ஆலயத்தில் அடகு வைக்கிறார்கள் பக்தர்கள்...

நாவுக்குச் சுவை தரும் குளிர்பானம் உடலுக்குக் கேடு என்றும், நறுமண சோப்பு தோலுக்கு ஒவ்வாது என்றும், குளுகுளு கண்ணாடி பார்வையைக் கெடுக்கக் கூடும் என்றும் அறிவியல் பூர்வமாக நிரூபித்து விடலாம். மூடநம்பிக்கையைக் கூட அறிவியல் பூர்வமாகத் தகர்த்து விடலாம்.

ஆனால் களிவெறியையோ, புத்துணர்ச்சியையோ, அமைதியையோ வழங்கும் ஒரு இசை எந்த வகையில் கேடானது என்று இசையின் வரம்பிற்குள் நின்று நிருபிப்பது கடினமானது.

அதுவும் காலுக்கு நைக், தொண்டைக்கு கோக், கண்ணுக்கு ரேபான் என்று ஒரு வகையான ஒருங்கிணைந்த ரசனையை - வாழ்க்கைப் பாணியை - ஆளுமையை பன்னாட்டு நிறுவனங்கள் உலகெங்கும் உருவாக்கி வரும் இன்றைய கால கட்டத்தில், உணர்ச்சித் தளத்திலும் அறிவுத் தளத்திலும் ஒருங்கே இயங்கும் இசை ரசனையை தனியே பிரித்தெடுத்துப் பரிசீலிப்பது இயலாத காரியம்.

''என்னுடைய ஃபாஷன், என்னுடைய வாழ்க்கைப் பாணி, என்னுடைய இசை ஆகியவற்றுடன் 'சிக்'கெனப் பொருந்துகிறது எக்ஸ்டஸி மாத்திரை'' என்று டைம் வார ஏட்டுக்குப் பேட்டியளிக்கிறான் ஒரு தாய்லாந்து இளைஞன். பேரின்ப மாத்திரையும் இசை ரசனையும் இணையும் புள்ளி எது?

★ ★ ★

இசை. அது நமது உள்ளத்துக்குள்ளே உணர்ச்சிகளை ஊற்றெடுக்க வைக்கிறது. நாமே அறியாததைப் போல நம் உள்ளத்தின் அடியாழத்தில் தேங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை திடீரென்று ஒரு நீரூற்றைப் போலப் பீறிட்டு மேலெழச் செய்கிறது.

அவநம்பிக்கையான தோல்வியுற்ற மனநிலையில் நம்பிக்கையையும் உற்சாகத்



தையும் துளிர்க்கச் செய்கிறது. சிந்தனையால் சாதிக்க முடியாத செயல் துடிப்பை தாளத்தால் தட்டியெழுப்புகிறது. சோகத்தைக் கையறு நிலையாக்கிச் செயலிழக்கவும் வைக்கிறது. சுருங்கச் சொன்னால் குறிப்பிட்டதொரு மனநிலையை இசை உருவாக்குகிறது அல்லது மாற்றுகிறது.

இசை என்பது ''இயற்கை விதிகளுக்கு ஏற்றாற்போல அளவு ரீதியாக அமைத்துக்

**தனது தொலை நோக்கியின் வழியே நட்சத்திரங்களைக் காட்டினார் கலிலியோ. இதன் வழியே பக்கத்து வீட்டுப் பெண் மாடியில் குளிப்பதைப் பார்க்க முடியுமா என்று கேட்டானாம் ஒரு கனவான். இசையமைப்பாளர்கள் கனவான்களாக இருக்கிறார்கள். ரசிகர்களான நம்மையும் தம்மைப் போன்ற கனவான்களாக்க முயற்சி செய்கிறார்கள்.**

கொண்ட தூய ஓசை மண்டலம்'' அதே நேரத்தில் அது ஒலியில் எழுதிய கவிதை. சொற்களைக் கடந்தும் ஊடுருவும் ஆற்றல் பெற்ற உணர்ச்சி. இசை மனிதனின் இரண்டாவது மொழி.

கவிதைக்குப் படிமம் என்றால் இசைக்குத் தாளம். கவிதையின் படிமத்தைக் காட்டிலும் தாளம் வலிமை மிக்கதாவும், ரசிகனின் உணர்ச்சிக்கு இசைந்ததாகவும் இருக்கும்போது மொழியை இசை வென்று விடுகிறது. ''திருப்பதி ஏழுமலை வெங்கடேசா'' என்ற திரைப்படப் பாடலுக்கு ஒரு பகுத்தறிவாளனின் கால்களையே தாளமிடச் செய்கிறது. அதாவது உணர்ச்சி அறிவை முந்துகிறது.

தாளம் நாம் கேட்கும் இசையில் மட்டும் இல்லை. நமது உடலின் இயக்கத்திற்குள்ளும் இருக்கிறது. இசையின் தாளம் எனும் கொக்கி உடலில் (சில நேரங்களில் உள்ளத்தின்) லயத்துடன் பொருந்தி விட்டால் எஞ்சினில் கோர்க்கப்பட்ட பெட்டியைப் போல ஆகிவிடுகிறான் ரசிகன்.

அணிவகுப்பில் விறைப்பாக நிற்கும் சிப்பாய் ஆரம்பத்தில் பாண்டு வாத்தியத்தின் தாள லயத்திற்கு ஏற்ப கவனமாகக் கால்களை எடுத்து வைக்கிறான்; அளந்து கைகளை வீசுகிறான். சிறிது நேரத்தில் தாளத்துடன் ஒன்றியவுடனே சாவி கொடுக்கப்பட்ட பொம்மையைப் போல, தன் முயற்சியின்றியே அவன் உடல் தாள லயத்திற்கு ஏற்ப மிதக்கத் தொடங்குகிறது.

அந்த அணிவகுப்பின் நோக்கம் எதுவாக இருந்தாலும், தாளலயத்தில் இயங்கும் உடல் அந்த இயக்கத்திலேயே ஒரு புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் அவனுக்கு வழங்குகிறது.

பொருள் புரியாத தியாகய்யர் பாடலைத் தோய்ந்து பாடும் பாடகன், உண்மையில் ஓசை மண்டலத்தில் சஞ்சரிக்கும் இன்பத்தைத்தான் பக்தி என்றும் பேரின்பம் என்றும் கற்பித்துக் கொள்கிறான். ஊனுருகிப் பாடுவதை உள முருகிப் பாடுவதாக எண்ணிக் கொள்கிறான்.

தாளத்திற்கேற்ப மணிக்கணக்கில் சோர்வின்றி ஆடும் தப்பாட்டக் கலைஞன் அனுபவிக்கும் இன்பமும், மொழி புரியாத ஏதோவொரு இந்திப் பாடலின் இசையில் தோய்ந்து கரையும் ரசிகனின் இன்பமும் இதே வகையைச் சேர்ந்ததுதான்.

ஆனால், ஓசைக்கும் தாளலயத்திற்கும் தன்னை ஒப்புக் கொடுக்கும் ஒரு குழந்தைக்கும் நமக்கும் வேறுபாடு இருக்கிறது. தாலாட்டுப் பாடலின் கவிதை நயத்தை குழந்தை புரிந்து கொள்வதுமில்லை; அந்த

படிப்பகம்

www.padippakam.com

ராகத்தின் அழகியல் உணர்ச்சிக்கு ஆட்படுவதும் இல்லை. ஆனால் நாம் தாளத்தின் வழியாகவும், இசையின் அழகியல் உணர்ச்சி வழியாகவும், இவற்றுக்குள் தந்திரமாக ஒளிந்திருக்கும் கவிதை வழியாகவும் அந்த இசை தோற்றுவிக்கின்ற உணர்வுக்கே சென்று விடுகிறோம்.

ஊன் உருகிப் பாடும் பாடகர் அந்த நிகழ்ச்சிப் போக்கில் உள்ளம் உருகவும் தொடங்குகிறார். தப்பாட்டம் ஆடும்போது தாளத்தினால் தோற்றுவிக்கப்பட்ட உடலியல் இன்பத்தை அனுபவிக்கும் கலைஞனுக்கு அதுவே உளரீதியான கிளர்ச்சியாகவும் மாறிவிடுகிறது.

எக்ஸ்டஸி எனும் மாத்திரை நரம்பு மண்டலத்தில் தோற்றுவிக்கும் இரசாயன மாற்றம் எப்படி மகிழ்ச்சி எனும் உணர்ச்சியாக மாற்றம் பெறுகிறதோ அப்படியே இசையும் நம்மீது வினையாற்றுகிறது.

அதனால்தான் குறிப்பிட்ட சில பாடல்களைக் கேட்கும் ரசிகன், இனம்புரியாத மகிழ்ச்சிக்கோ, மனக்கிளர்ச்சிக்கோ, சோகத்திற்கோ ஆளாகிறான். **இனம்புரியாத** அந்த உணர்ச்சியின் இனத்தைக் கண்டறிவது எப்படி? குறிப்பிட்டதொரு உணர்ச்சிக்கு ஆட்படுத்துவதில் அந்த இசையின் பங்கு என்ன? ஆட்படுகின்ற ரசிகனின் பங்கு என்ன? இதைக் கண்டுபிடிப்பதுதான் இசையின் அழகியல் குறித்த ஆய்வு.

எக்ஸ்டஸி எனும் ரசாயனம் மூளை எனும் பொருள் மீது ஆற்றும் வினையை சோதனைச் சாலையில் வைத்துக் கண்டுபிடிப்பதைப் போல இது எளிமையானதல்ல. கலைஞனுடைய சிந்தனையின் விளைபொருளான இசை எனும் கலை, ரசிகனின் சிந்தனை மீது ஆற்றும் வினையைக் கண்டுபிடிக்கும் அறிவியல் இது.

ஓசை மண்டலத்தில் இயங்கும் ஒலி அலைகளின் சேர்க்கையை இயற்பியல் ஆய்வு செய்கிறது; ஒலித் துணுக்குகளான தாளங்கள் மனித உடல் எனும் பொருள் மீது வினையாற்றும் போது உடலில் ஏற்படும் மாற்றங்களை - சுரப்பிகளில் தோற்றுவிக்கப்படும் தூண்டுதலை உடற்கூறியல் ஆய்வு செய்கிறது.

குறிப்பிட்டவொரு சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட ராகத்தை கலைஞன் ஏன் தேர்ந்தெடுத்தான் என்பதையும், அது குறிப்பிட்ட சில ரசிகர்களின் மீது ஏன் தாக்கத்தைச் செலுத்துகிறது அல்லது செலுத்தத் தவறுகிறது என்பதையும் (சுருங்கச் சொன்னால் கலைஞன் மற்றும் ரசிகனின் உணர்ச்சித் தளத்தை) ஆய்வு செய்கிறது உளவியல்.

கோபம் சோகம் அல்லது கேளிக்கை போன்ற பல உணர்ச்சிகளின் வெளிப்பாட்டில் ஆங்கிலேயனும், தமிழனும், வங்காளியும், சந்தால் பழங்குடி இனமும் ஏன் வேறுபடுகின்றனர் என்பதை, அதாவது தமிழிசை, இந்துஸ்தானி, மேற்கத்திய இசை போன்ற இசை மரபுகளை சமூகவியல் ஆய்வு செய்கிறது.



இசைப்பாடலொன்றில் கவிதை மற்றும் இசையின் கருத்தையும் அழகியலையும் (அதாவது அறிவையும் உணர்ச்சியையும் அல்லது கண்ணோட்டத்தையும் ரசனையையும்) தத்துவ ஞானம் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்கிறது.

மொத்தத்தில் இயற்கை விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானமும் இசை அழகியல் குறித்த ஆய்வில் ஒன்று சேர்கின்றன.

தாளத்தின் காலத்தைக் (Time) கணிக்கிறது இயற்கை விஞ்ஞானம். காலத்தின் தாளலயத்தை மதிப்பிடுகிறது சமூக விஞ்ஞானம்.

ஒவ்வொரு காலகட்டத்தின் இசைப் படைப்பும் அந்தச் சமூகத்தின் நாடித்துடிப்பையும் படைப்பாளியின் ஆளுமையையும் ஒரு கோட்டோவியத்தைப் போலச் சித்தரிக்கின்றன. அக்காலகட்டத்தின் இசை ரசனை சமூகத்தின் நாடித் துடிப்பை ஏறத்தாழ உணர்த்துகிறது.

அதிநவீன மின்னணுக் கருவிகளும், ஒலிப்பதிவு முறைகளும் கையில் இருந்தாலும் தொலைக்காட்சிகளின் மேற்கத்திய பாப் இசை வகைகளும், நம்முடைய திரை இசையும் சமூகத்தின் மீது ஏவிவிடும் இசை ரசனையும் தோற்றுவிக்கும் மன உணர்வும் எத்தகையதாக இருக்கின்றன?

தனது தொலை நோக்கியின் வழியே நட்சத்திரங்களைக் காட்டினார் கலிலியோ. இதன் வழியே பக்கத்து வீட்டுப் பெண் மாடியில் குளிப்பதைப் பார்க்கமுடியுமா என்று கேட்டானாம் ஒரு கனவான்.

இசையமைப்பாளர்கள் கனவான்களாக இருக்கிறார்கள். ரசிகர்களான நம்மையும் தம்மைப் போன்ற கனவான்களாக்க முயற்சி செய்கிறார்கள்.

ஓய்வு நேரத்தில் மட்டுமின்றி உழைக்கும் நேரத்திலும் இசையை ரசிக்கும் பழக்கத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம். மூச்சுக் காற்றைப் போல அனிச்சையாகக் காதில் நுழைந்து இதயத்தில் பதிவாகிறது இசை. அந்த இசை நமக்கு அளிப்பது புத்துணர்ச்சியா, அமைதியா, களிவெறியா அல்லது புதிய உணர்வா என்று நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

ஒரு எழுத்தாளர் குறிப்பிட்டதைப் போல "நாம் பொழுதுபோக்கிற்காக ஒரு முறை டிஸ்னிலாந்துக்குச் சென்று வரவில்லை; டிஸ்னிலாந்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்." நம்முடைய உழைப்பு நேரத்தை மட்டுமல்ல, ஓய்வு நேரத்தையும் பன்னாட்டு முதலாளிகளிடம் பறி கொடுத்து விட்டோம். எப்படிப் பறி கொடுத்தோம் என்று புரிந்தால்தான் எப்படி மீட்பதென்பதை யோசிக்கவே முடியும்.

**(தொடரும்)**

www.padippakam.com

# பாக்சர் வடிவேலு... வெல்டிங் குமார்... காஞ்சி சங்கராச்சாரி...

## ஆளும் வர்க்க அடியாட்கள்

''நாட்டில் தாராளமயம்
நடந்து கொண்டிருக்கிறது
அதேபோல கோவில்களையும்
தனியார்வசம் ஒப்படைக்க வேண்டும்''

கட்டளையிடுவது யார்?
காட் ஒப்பந்த அதிகாரியா
இல்லை
காஞ்சி சங்கராச்சாரி.

அனாதி காலந்தொட்டே
தண்ணீரைத் தனியாராக்கிக்
கமண்டலத்தில் அடக்கிய
ரிசிப் பரம்பரை ஆயிற்றே

பிறருக்கும் தெரியும்படி
பிரம்மதேயம் கொடுக்கும்
பொற்கால ஆட்சியாயிருந்தால்
ஓர் அசரீரி மூலமாக
அமுக்கிவிடலாம் கோவில்களை.

தருணம் பார்த்துத் தருவதற்குள்
தவித்துப் போகிறார் ஜெயேந்திரர்

தியாகராஜ சுவாமிக்கு நூறுவேலி
தேவரடியார்களுக்கு ஒரு ஏழுவேலி
என எழுதி வாங்கிக் கொண்டு
வேலிகளையே மேய்ந்த
வெள்ளாட்டு வம்சமாயிற்றே

தண்டத்தை விட்டாலும்
தனியார் மயம் விடேன் என்று
தபசில் இறங்கி விட்டார்.

சிவமயம் விஷ்ணுமயம் என்று
சிலாகிக்க வேண்டிய வாயில்
தனியார்மயம் என்றால் தகுமோ?
இவர் ஆன்மீகவாதியா? அரசியல்
வாதியா?

ஆன்மீகம் வேறு அரசியல் வேறு எனக்
குழம்பும் பக்தனே
ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுதான்.

★

கல்வித் தெய்வம் சரஸ்வதிக்கு
கோயில் கட்டுவதை விட
பொறியியல் கல்லூரி, மருத்துவக்
கல்லூரி
என்று புகுந்து விளையாடினால்
எத்தனை சாராயக்கடை ஏலம் எடுக்கவும்
சரஸ்வதியின் வீணையை மீட்டிக்



கொள்ளலாம்.

படிக்கவரும் பக்தர்களின்
அரைஞாண் கொடியைத் தவிர
அனைத்தையும் அவிழ்த்துக் கொள்ளும்
இந்த தெய்வீகத் திருடர்களுக்குப் பெயர்
'கல்வி வள்ளல்கள்'

அப்பாவிகளின் கருவறை வரை
வளைத்துப் போட்டு
விளைநிலங்களைப் பிடுங்கி
ரியல் எஸ்டேட்டாக்கி
இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தும்
அரிமா சங்கத்தின்
அயோக்கியனுக்குப் பெயர்
'நகரத் தந்தை.'

எழில் மிகு சென்னை
இரண்டாயிரத்துக்காக
ஈ மொய்க்கும் குடிசைத் தொட்டிலுக்குத்
தீ வைத்து
கரசேவை புரிந்த கையாலேயே
இலவச வேட்டி சேலை வழங்கும்
ஈனப் பிறவிக்குப் பெயர்
'ஏழைகளின் நாயகன்'.

பல லட்சம் குடும்பங்களின்
அடுப்பை அணைக்கும்
பொருளாதாரக் கொள்கையைப்
பாராளுமன்றத்தில் கமுக்கமாக
நிறைவேற்றிவிட்டு
தனது பிறந்தநாள் அன்னதானத்தை
ஊர் முழுக்கச் சுவரொட்டியாலேயே
பரிமாறும்
விளம்பர வெறியனுக்குப் பெயர்
'அமைதிப் புயல்'

இப்படித் தனித்தனியாக இல்லாமல்
எல்லா மோசடிகளும் சேர்ந்து
ஒரே ஆளைப் பார்க்க முடியுமா?

பார்க்க முடியும்
அவர்தான் சங்கராச்சாரி.

★

தலைக்கு எண்ணெய் இல்லாத
தரித்திர நாராயணன்கள்
சிலைக்கு எண்ணெய் வாங்கும்
இச்செம்மாந்த நாட்டினிலே
கோயில் தனியாரானால்?

உமையொரு பாகனின் சரிபாகத்தை
பெப்சிக்கும், கோக்குக்கும்
கொடுத்து விட
மடப்பள்ளியின் நளபாகத்தை
'பிட்சா கார்னர்' பிடித்துவிட
ஆறு கால பூசையை -
அறிவிப்பார்கள் இப்படி:

''தினசரி ஆறுகாட்சிகள்
மைலாப்பூர் கபாலி ஏ.சி.யில்
மாங்காடு டீலக்சில்
இதோ நகர வாழ்க்கைக்கு ஏற்ற
டிரைவ் இன் ஐயப்பா
உடனுக்குடன் தீர்த்தம் பருக
பார் வசதியுடன் உங்கள்
பார்த்தசாரதி கோயில்.

இன்று முதல் அஷ்டலட்சுமி கோயிலில்
இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான
சர்வ புருஷ வன்னிமரம்.
ஒரே சுற்றில் தலைப்பிரசவம்....''

மிகையென்று நகைக்கும் பக்தர்களே
கம்ப்யூட்டர் சாம்பிராணியோடு
கை குலுக்கக் கற்றுக் கொண்ட
உங்கள் பக்தியே இதற்கு அச்சாரம்.

உழைக்கும் மக்களைக் கழுவிலேற்றும்
தனியார்மய உபதேசம் கிடக்கட்டும்
ஓய்! ஜகத் குருவே!
முதலில் சங்கர மடத்தை
தனியாருக்குக் கொடுத்து விட்டு
நீர் பரமாத்மாவுக்குப்
பணிவிடை செய்யப் போவது எப்போது?

★

• துரை. சண்முகம்

www.padippakam.com

# தோழர் செல்வராசு: ஒரு தியாகம் உருவான பாதை

கரூர் நகரில் எமது தோழமை அமைப்பான புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி செயல்பட்டு வருகிறது. கடந்த டிசம்பர் இறுதியில் அருகே உள்ள அம்மன் நகர் பகுதியில் காமவெறி பிடித்த ரவுடிக் கும்பலிடமிருந்து தோழர்கள் ஒரு பெண்ணைக் காப்பாற்றுகின்றனர். பிடிபட்ட ரவுடிகளை மக்கள் முன் விசாரித்து அடித்து விரட்டுகின்றனர்.

ஆத்திரமடைந்த ரவுடிகள் ஆயுதங்களையும் கும்பலையும் சேர்த்துக் கொண்டு அடுத்த நாள் வருகின்றனர். தம்மைத் தாக்கிய தோழர்கள் கிடைக்காத நிலையில் முன்னணியாளரான தோழர் பழனிச்சாமியைப் பிடித்துக் கொண்டனர். அதை தனி ஒருவராகத் தடுத்துப் போராடிய தோழர் செல்வராசையும் கொண்டு சென்றனர். இரவு முழுவதும் வெறிதீர அடித்து வதைத்தனர். இக்கொடூரத் தாக்குதலில் தோழர் பழனிச்சாமி படுகாயமடைந்தார். தோழர் செல்வராசு கொலை செய்யப்பட்டார். ஏன் - என்ன என்று பகுதி மக்களும், தோழர்களும் யோசிப்பதற்குள் எல்லாம் சில மணிநேரங்களுக்குள் முடிந்து விட்டது.

ஒரு வேளை தோழர் செல்வராசு தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியுமா? முடியும். தயங்கி நின்ற மக்களைப் போலவே அவரும் நின்றிருக்கலாம். அல்லது ஆபத்தில்லாத மாதிரி சற்று மிதமான எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம். வெட்டரிவாளுடன் ஊளையிட்டு வரும் வெறிக் கும்பலை எதிர்த்து ஒரு தனி மனிதன் என்ன செய்துவிட முடியும்? ரவுடிகளை தனியாளாய் நின்று பந்தாட இது ஒன்றும் தமிழ் சினிமாக் காட்சியில்லையே? ஆயினும் தனக்கு அடி உதை நிச்சயம் எனத் தெரிந்தும் அவர் எதிர்த்து நின்றார். அதனாலேயே உயிரும் துறந்தார்.

தோழர் செல்வராசு அமைப்பில் சேர்ந்த சில வருடங்களுக்குள்ளேயே தன்னை கம்யூனிஸ்ட்டாக மறுவார்ப்பு செய்து கொள்வதிலும், குடும்பத்தின் பிற்போக்குப் பண்பை எதிர்ப்பதிலும், சுயேச்சையாக அரசியல் வேலை செய்வதிலும் படிப்படியாக முன்னேறி வந்தவர். வர்க்கக் கோபமும், போர்க் குணமும், அநீதி கண்டு கொதித்தெழுவதும் அவரிடம் உறைந்திருந்த பண்புகள். அவருடன் பணியாற்றிய தோழர்கள் அப்படிப் பல சம்பவங்களை நினைவு கூர்கின்றனர். அத்தகைய கம்யூனிசப் பண்புதான் அவரை ஒதுங்கி நிற்க அனுமதிக்கவில்லை.

மக்களைப் புறந்தள்ளும் தனி நபர் சாகசவாதம், மக்களின் புறத்தே நின்று வால்பிடிக்கும் கோழைத்தனம் - இவையிரண்டையும் நிராகரிப்பதில் பிறக்கிறது மக்கள் திரள் வழி. தனி நபருடைய ஆளுமையின் சான்றாக அல்ல - மக்கள் திரளுடைய உணர்வு நிலையின் உந்து விசையாக, தனி நபருடைய ஆற்றலின் நிருபணமாக அல்ல - அந்தத் தருணத்துத் தேவையை நிறைவு செய்யும் தாதியாக வெளிப்படுவதுதான் மக்கள் திரள் பாதையின் வீரம்.

எழுபதுகளின் வீரம் செறிந்த நக்சல்பாரி இயக்கம் ஆயிரக்கணக்கான இளைஞர்களை புரட்சியின் நலனுக்குக் காணிக்கையாய்த் தந்தது. நடுத்தர வர்க்க வாழ்வை உதறி நாட்டுப் புறங்களுக்கு சென்று வர்க்க எதிரிகளை அழித்ததிலும், அரச பயங்கரவாதத்தைத் துச்சமெனக் கருதியதிலும், போலி மார்க்சியத்தை முறித்ததிலும் - இந்தியப் புரட்சி வரலாற்றில் வசந்தத்தின் இடி முழக்கமாக அந்தத் தோழர்கள் உருவாயினர். ஆயினும் தமக்குப் புரிந்த அரசியலையும், தமது வர்க்கக் கோபத்தையும் மக்களிடம் பற்றச் செய்யும் வலிமிகுந்த மக்கள் திரள் பாதையினை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அந்தத் தவறே நக்சல்பாரி இயக்கம் பின்னடையக் காரணமானது.

உள்ளூர் பிரச்சினை முதல் நாட்டுப் பிரச்சினை வரை மக்களிடம் கொண்டு சென்று, பயிற்றுவித்து, அணிதிரட்டும் அரசியல் வேலையினையே மார்க்சிய லெனினியத்தின் தலைமைக் கலை என்கிறார் மாவோ. மக்களை அரசியல் ரீதியில் அணிதிரட்டும் இந்த வேலையினையே மக்கள் திரள் வேலை என்கிறோம்.

கோழைத்தனத்தையும், சாகசத்தையும் நிராகரிக்கின்ற இவ்வேலை முறை அவ்வளவு சுலபமானதல்ல. உள்ளூர் ரவுடி முதல் உலக ரவுடி வரை, இந்து மதவெறியர் முதல் உள்ளூர் மேல் சாதி வெறியர் வரை, ஏகாதிபத்திய பண்பு முதல் உள்ளூர் நிலவுடைமைப் பண்பு வரை ஒரே சமயத்திலும், மாறி மாறியும், தொடர்ந்தும், புதிதாகவும், பகுதி அளவிலும், மைய அளவிலும் எதிர்க்க வேண்டும், அடையாளம் காட்ட வேண்டும். மாற்று வாழ்வை வாழ்ந்து காட்ட வேண்டும். இதன் ஊடாகத்தான் மக்கள் நம்பிக்கை அடைந்து, அரசியலைப் புரிந்து நாட்டு நலனுக்காக போராடத் தயாராகின்றனர்.

சிதறிக் கிடக்கும் மக்கள் பார்வையினை, புரட்சியின் நலன் என்ற அரசியல் இழையினால் ஒன்று சேர்க்கும் இப்பணியிலேதான் தோழர்களும் தங்களை தகுதியான கம்யூனிஸ்ட்டாக மாற்றிக் கொண்டு மறுபிறவி எடுக்கின்றனர். சிறை - சித்திரவதை போன்ற அடக்குமுறைகள், தன்னிடமும் - குடும்பத்திடமும் உள்ள பிற்போக்குப் பண்புகள் ஆகியவற்றை வென்று, தோழர்கள் மறுபிறவி எடுக்கும் அந்த போராட்டமும் அவ்வளவு எளிதாக நடப்பதில்லை. உடலையும் - உள்ளத்தையும் மறுவார்ப்பு செய்யும் அந்தக் கடினமான பாதையிலேதான் எமது அரசியல் வெற்றியும், உள்ளார்ந்த மகிழ்ச்சியும், மக்களை அணிதிரட்டுவதும் பின்னிக் கிடக்கிறது.

மக்கள் திரள் வேலையின் தன்மை ஒவ்வொரு பிரச்சினைக்கேற்பவும் மாறுபடுகிறது. மோதலும் - பின்வாங்குதலும், அடிப்பதும் - அடிவாங்குவதும், பொறுமையும் - அவசரமும், தியாகமும் - பாதுகாப்பும், கிளர்ச்சியும் - பிரச்சாரமும், வெளிப்படையும் - தலைமறைவும், மக்களின் உணர்வு நிலை - தயார் நிலையைக் கணக்கில் கொள்கின்றன. அரசியல் நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற ஒரே இலக்கிற்காகவே எல்லா வேலைகளும் ஒன்றுபடுகின்றன.

> **மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி போன்ற எமது அமைப்புகள் வெற்றி இலக்கை எட்டுவதில் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதற்கும், பழைய வாழ்க்கையின் கசடுகளை வழித்தெறிவதில் எமது தோழர்கள் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதற்கும் தோழர் செல்வராசு எனும் தியாகச்சுடர் ஒரு சான்று.**

மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி போன்ற எமது அமைப்புகள் இந்த இலக்கை எட்டுவதில் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதற்கும், பழைய வாழ்க்கையின் கசடுகளை வழித்தெறிவதில் எமது தோழர்கள் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதற்கும் தோழர் செல்வராசு எனும் தியாகச்சுடர் ஒரு சான்று. அந்தச் சுடரின் எண்ணெயாக இருப்பதோ அமைப்பு நடைமுறை எனும் வரலாறு.

• • •

www.padippakam.com

எண்பதுகளின் துவக்கத்தில் தேவாரம் தலைமையிலான போலீசு வெறியர்கள் புரட்சியாளர்களை வேட்டையாடிய காலம். தலைமறைவாக இருந்த தோழர் பச்சையப்பன், மக்களைச் சந்திக்கும் ஆர்வத்தில் தமது பகுதிக்குச் செல்கிறார். போலீசிடம் பிடிபட்டு அடித்துக் கொல்லப்படுகிறார். தவிர்த்திருக்கக் கூடிய உயிரிழப்புதானெனினும், தவிர்க்க முடியாத முன்னுதாரணம் - அவருடைய உணர்வு.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில சிறையில் இருந்து குண்டு தயாரித்துத் தப்பித்து, மீண்டும் கைதாகி சித்திரவதை செய்யப்பட்டார் தோழர் ஆம்பள்ளி முனிராசு. அவரும் அவரையொத்த தோழர்களும் மக்கள்திரள் பாதைக்கு மாறிவந்த போராட்டம் ஒரு விதமென்றால், ஐந்தாண்டு அமைப்பு வாழ்க்கையில் தோழர் செல்வராசு சந்தித்த போராட்டம் இன்னொரு விதம்.

80-களின் மத்தியில் தமிழரசனின் தமிழ்நாடு விடுதலைப்படை திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சில நள்ளிரவு குண்டு வெடிப்பு வைபவங்களை நடத்தியது. இதைச் சாக்கிட்டு உண்மையான நக்சல்பாரிகளை ஒடுக்கியது அரசு. ம.க.இ.க.வின் தலைமைத் தோழர்கள் உள்ளிட்டு ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். அணிகள் - ஆதாரவாளராயிருக்கும் தோழர்கள் மட்டும் கவனமாக கடும் சித்திரவதைக்கு ஆட்படுத்தப்பட்டனர்.

ஒரு அறையில் சித்திரவதை, மறு அறையில் விசாரணை; காலையில் ஆசை வார்த்தைகள் - மாலையில் அடி உதை; வீடுகளெங்கும் சோதனை - வீட்டு உரிமையாளருக்கு மிரட்டல்; திருமணமான மறுதினமே கைது செய்யப்பட்ட தோழர்கள்... எத்தனை நடந்தும் தேர்தல் புறக்கணிப்பு இயக்கமும், பாசிச ராஜீவுக்கு எதிரான இயக்கமும் நிற்கவில்லை.

வெளியே ஒட்டப்படும் ஒவ்வொரு சுவரொட்டிக்கும் உள்ளே அடிஉதை. ஆயினும் ஒரு தோழர் கூடப் பணியவில்லை. அதனாலேயே போலீசு வேறு வழியின்றி சட்டவிரோதக் காவலிலிருந்து எம்மை விடுவித்தது. அடி உதையினால் எம்மைப் பணிய வைக்க முடியாது என்பதை போலீசிடமிருந்து மட்டுமல்ல, செல்வராசை அடித்து நொறுக்கிய ரவுடிகளிடம் கேட்டாலும் தெரிந்து கொள்ளலாம்.

90-களின் ஆரம்பத்தில் பாசிச ராஜீவ் கொலை செய்யப்பட்டு, பங்காளி ஜெயா ஆட்சிக்கு வந்தார். ஈழத்தமிழர்கள் மீதான அடக்குமுறை தொடங்கிய போது எமது எதிர்ப்பியக்கமும் தொடங்கியது. 'பாசிச ராஜீவின் கொலை பழிக்குப் பழியே' என முழங்கிய 'புதிய ஜனநாயகம்' சி.பி.ஐ.ஆல அச்சுறுத்தப்பட்டது. 'ஈழத் தமிழரை ஒடுக்காதே பார்ப்பன பாசிச ஜெயாவை முறியடிப்போம்' என சுவரொட்டி ஒட்டிய தோழர்கள் தேசத் துரோக வழக்கில் கைது செய்யப்பட்டனர். கடலூர் - நெய்வேலி தோழர்களுக்கு 'தடா', தஞ்சைத் தோழர்களுக்கு என்.எஸ்.ஏ. என்று தமிழகம் முழுவதும் கைது நடவடிக்கை வாடிக்கையானது. ஆயினும் ஒலிப்பேழை, வெளியீடு, துண்டறிக்கை, ஊர்வலம், பொதுக் கூட்டம் என எமது இயக்கம் மக்களிடையே கொண்டு செல்லப்பட்டு, எதிரிகளை தூங்கவிடாமல் செய்தது.

இதே நேரத்தில் புலி வேடம் பூண்ட பல தமிழினத் தலைவர்கள் 'தந்திரமாய்' அமைதி காத்தார்கள். அவர்களைப் போல 'புதிய ஜனநாயகமும், புதிய கலாச்சாரமும்' அமைதி காத்து ஆபத்தைத் தவிர்த்திருக்கலாம். செல்வராசும் கூட அமைதி காத்து ஆபத்தைத் தவிர்த்திருக்கலாம்தான், முடியாததேன்? விடை வேண்டுவோர் அத்தகைய தமிழினத் தளபதிகளைக் கேளுங்கள். அல்லது தோழர் செல்வராசுவுடன் பணியாற்றிய தோழர்களைக் கேளுங்கள்.

93-இல் திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம். இந்தியாவில் இந்துமதவெறியர்களின் வரவை பாப்ரி மசூதி இடிப்பு அறிவித்தது. தமிழகத்திலோ அவர்களை வேரறுக்கும் வழியை இம்மாபெரும் இயக்கமும் மக்களிடையே கொண்டு சென்றது.

மே 24-ல் அந்தக் கோவிலின் கருவறையில் எமது தோழர்கள் நுழைந்தனர். பார்ப்பனர்களும், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களும் தோழர்களை ரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கினர். திருப்பித் தாக்கினால், எதிரியின் ரத்தம் அங்கே சிந்தினால் அரசியல் நோக்கம் திசைதிரும்பும் என்பதால் எமது தோழர்கள் அமைதி காத்தனர். அதுவே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையும் ஆகும். தோழர் பழனிச்சாமியை காப்பாற்ற வேண்டும் என தனது மனசாட்சி இட்ட கட்டளையை தோழர் செல்வராசு நிறைவேற்றியதும், அமைப்பு இட்ட கட்டளையை கருவறையில் நுழைந்த தோழர்கள் நிறைவேற்றியதும் தன்மையில் ஒன்றுதான். இவர்கள் அமைதி காத்ததும், தோழர் செல்வராசு அமைதி காக்க மறுத்ததும் மக்கள் திரள் பாதையின் இருவேறு பரிமாணங்கள்.




மறுகாலனியாக்கத்தின் அபாயத்தை உணர்த்த 94-இல் இறால் பண்ணை அழிப்புப் போராட்டம். இயக்கத்தின் வீச்சும் அரசின் அடக்குமுறையும் ஒரே விகிதத்தில் சென்றது. தேவாரம் தலைமையிலான போலீசு கீழத் தஞ்சையைச் சுற்றி வளைத்தது. பெருந்தோட்டத்து கிராம மக்கள் இரு மாதகாலம் கடும் அடக்கு முறையைச் சந்தித்தனர். மே-1 இல் 200 பெண் தோழர்கள் உட்பட 1500 பேர் கைது செய்யப்பட்டு 2 வாரம் சிறையிலடைக்கப்பட்டனர்.

கிராமங்களில் தங்கிப் பணியாற்றிய தோழர்களை வீடுவீடாகப் புகுந்து போலீசு இழுத்துச் சென்றது. போலீசு நடமாட்டத்தை வேவு பார்த்து தோழர்களைக் காப்பாற்றிய பெண்கள், நெற்குதிருக்குள் தோழர்களை ஒளித்து வைத்துப் பாதுகாத்த ஆண்கள், அடைக்கலம் கொடுத்ததற்காக அடிபட்ட முதியவர்கள்...!

பெருந்தோட்டம் மக்களின் செயலூக்கம், கரூர் அம்மன் நகர் மக்களின் கண்ணீர், கையறுநிலையும் மக்கள் திரள் போராட்டப் பாதையின் இருவேறு பரிமாணங்கள். கண்ணீரைக் கோபமாக மாற்றும் ரசவாதத்தைச் செய்யவிருப்பதுதான் தோழர் செல்வராசுவின் தியாகம்!

பாசிச ஜெயா தமிழகத்தைத் தனது இரும்புக் கரத்தால் மொட்டையடித்த இருண்ட காலம். திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கெதிரான இயக்கத்தைத் துவக்கினோம். வள்ளல்கள், தளபதிகள் என்று அறியப்பட்ட இக்கேடிகளின் உண்மை முகம் மக்களிடம் வெளிச்சமாக்கப்பட்டது. விருத்தாசலம், நெய்வேலி, திருச்சி, கம்பம், வேதை, தருமபுரியில் பல 'தளபதி'களுடன் மோதல் துவங்கியது. சில 'வள்ளல்கள்' ஊர்வலமாய் அடித்து இழுத்துச் செல்லப்பட்டனர். சில 'தளபதிகள்' மன்னிப்பையும் பேச்சுவார்த்தையையும் கோரினர்.

அதேபோல ரவுடிகளும் எம்மைத் தாக்கினர். விழுப்புரம் தோழர்கள் இருவர் மூன்று நாட்கள் கட்டி வைத்து அடிக்கப்பட்டனர். இவ்வியக்கத்தில் உயிரிழப்பையும் எதிர்பார்த்து ரவுடிகளுடன் மோதத் துணிந்த எம்மை இயக்கியது வர்க்கக் கோபம்.

படிப்பகம்

www.padippakam.com

அதே வர்க்கக் கோபம்தான் சேலம் நகர பாதையோர வியாபாரிகளைப் பந்தாடிய போலீசு ரவுடியை இழுத்துத் தள்ளிய தோழர் செல்வராசையும் இயக்கியது.



அடுத்து வந்த தேர்தலில் ஜெயா - சசி கும்பலை நீதி மன்றத்தால் தண்டித்து விட முடியும் என்ற மாயை எழுப்பப்பட்ட காலம். மக்கள் மட்டுமே அவர்களைத் தண்டித்து ஊழல் சொத்துக்களைக் கைப்பற்ற முடியும் என 'தஞ்சை வினோதகன் மருத்துவமனையை கைப்பற்றும் போராட்டம்' எடுத்தோம்.

நகரைச் சல்லடையாகச் சலித்துக் காத்த போலீசின் கண்களுக்கு சிக்காமல் 300 தோழர்கள் புகுந்து ஜெயாவின் சொத்தை 'மக்கள் மருத்துவமனையாக' அறிவித்தனர். ஆத்திரப்பட்ட போலீசின் லத்திக் கம்பு ஆக்ரோசத்துடன் தாக்கியது. மண்டை உடைந்த வாய் பேச இயலாத சிறுவன் ஞானவேலும், இளம் தோழர் சுமதியும் அதில் அடக்கம். 110 பேர் மீது கொலை வழக்கு போடப்பட்டது. இத்தகைய போராட்டங்களை அமைதியாக நடத்தியிருக்கலாமே என்ற கேள்விக்கு வாழ்வின் மாற்றம் அமைதி என்னும் சிமிழுக்குள் அடங்கி விடுவதில்லை என்று பதிலளிக்கிறார் தோழர் செல்வராசு.

ஆதிக்க சாதியினரை எதிர்த்த தாழ்த்தப்பட்ட மக்கள் எழுந்து நின்ற தென் மாவட்ட கலவர காலம். 'சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்' தொடங்கினோம். பண்ணைப்புரம் தனிக்குவளை தகர்க்கும் போராட்டம் நடத்திய தோழர்கள் தெருவிலும், கோம்பை காவல் நிலையத்திலும் போலீசால் நொறுக்கப்பட்டார்கள். தருமபுரியிலும், காரப்பட்டியிலும் தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்திய தோழர்களுடன் வாய்ச் சண்டையிட்ட 'மேல் சாதி' மக்கள் பேச்சு வார்த்தையை நிறுத்திக் கொண்டனர். விழுப்புரத்தில் நாம் நடத்திய சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழாவிற்கு - மணமக்களாயிருந்த பல தோழர்களின் பெற்றோர்கள் வரவில்லை. சாதி வெறியை களத்தில் சந்திக்கும் போராட்டத்தை விட, சாதி உணர்வை வாழ்க்கையில் சந்திக்கும் போராட்டம் கடினமானது. 'செய்தால் சாதி மறுப்பு மணம்தான் செய்வேன்' என்று பெற்றோர்களுடன் போராடிய தோழர் செல்வராசுக்கும் அது தெரியும். இரத்தம் சிந்தாத அந்த வலிதான், இரத்தம் சிந்தும் உறுதியை அவருடைய உள்ளத்திற்கு வழங்கியிருக்கிறது.

பார்ப்பனியத்தின் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கெதிராகவும், ஏகாதிபத்திய சீரழிவுக்கெதிராகவும், உழைக்கும் மக்களின் இசை படைக்கவும் பரிணமித்து வருகிறது 'தமிழ் மக்கள் இசை விழா'. விழாதான் என்றாலும் இங்கேயும் போராட்டம் பிரிக்கவொண்ணாமல் இணைந்தே இருக்கிறது. தியாகய்யர் உற்சவத்தில் 'தமிழில் பாடு' என்று முழங்கிய தோழர்கள் போலீசால் புரட்டியெடுக்கப்பட்டனர். இன்றும் திருவையாற்றில் நாம் விழா எடுக்க அனுமதி மறுக்கும் அரசு, சுவரெழுத்தை தடுக்கும் போலீசு, புறக்கணிக்கும் பத்திரிகைகள் போன்ற தடைகளுடன், நூற்றுக்கணக்கான தோழர்களின் கடுமுழைப்புடன், பல்லாயிரம் மக்கள் ஆதரவுடன் இசைப் போராட்டம் தொடருகிறது. இசை விழா வேலைகளைச் செய்து கொண்டிருந்த தோழர் செல்வராசு விழாவிற்கு ஒரு வாரம் முன்பே கொல்லப்பட்டார். இந்த ஆண்டு இசை விழா அவருக்கு வீரவணக்கம் செலுத்தி தொடங்கியது.

**தோழர் பழனிச்சாமியை காப்பாற்ற வேண்டும் என தனது மனசாட்சி இட்ட கட்டளையை தோழர் செல்வராசு நிறைவேற்றியதும், அமைப்பு இட்ட கட்டளையை கருவறையில் நுழைந்த தோழர்கள் நிறைவேற்றியதும் தன்மையில் ஒன்றுதான். இவர்கள் அமைதி காத்ததும், தோழர் செல்வராசு அமைதி காக்க மறுத்ததும் மக்கள் திரள் பாதையின் இருவேறு பரிமாணங்கள்.**

இப்படி மைய அரசியல் இயக்கங்கள் மட்டுமல்ல, தோழர் செல்வராசு கொல்லப்பட்ட உள்ளூர் ரவுடிப் பிரச்சினைகளைப் போன்ற பலநூறு பகுதிப் பிரச்சினைகளும் எமது தோழர்களால் எதிர்கொள்ளப்படுகின்றன.

• சென்னை ரவுடி தங்கய்யாவை முடக்கிய போராட்டம், பொய்கை அரசூர் பண்ணையார் இராமலிங்க நாயுடுவை அடக்கிய போராட்டம், விருத்தாசலம் பா.ம.க ரவுடி வெங்கடேசனை தண்டித்த போராட்டம், சேரிக்கு வர மறுத்த தஞ்சை வல்லம் சவேரியார் தேரை கைது செய்த போராட்டம், திருச்சி தரைக் கடை வியாபாரிகள் போராட்டம், கரூர் விசைத்தறித் தொழிலாளர் போராட்டம். கோவையில் இந்துமதவெறியருடன் நடக்கும் தெருச்சண்டை, பெங்களூர் சென்று கொத்தடிமைகளை மீட்ட தருமபுரி வி.வி.மு. போராட்டம், பெரியார் அணை போராட்டம், கம்பம் அனுபவ் தேக்குமர அழிப்புப் போராட்டம், உசிலை ஆதிக்க சக்திகளை எதிர்த்த போராட்டம் என்று ஏராளமான போராட்டங்கள்!

பல தோழர்கள் மீது கொலை வழக்கு. ஆயுள் தண்டனை! எமது ஆண்டு வேலைத் திட்டத்தில் சில மாதங்களை சிறைக்கும், நீதி மன்ற வாய்தாவுக்கும் மறக்காமல் ஒதுக்குகிறது போலீசு. துன்பமான இந்த வழியை விட்டால் வேறு ஏதும் இல்லையா என்றால் நிச்சயமாக இல்லை என்கிறார் தோழர் செல்வராசு.

• • •

அடக்குமுறைக்கு அஞ்சாமையும், போர்க்குணமும் கம்யூனிஸ்டுகளிடம் மட்டும்தான் இருக்கிறதா? நிச்சயமாக இல்லை. சொல்லப் போனால் உழைக்கும் மக்களிடம் அவை இயல்பாக இருக்கின்றன. ஆயினும் பல சந்தர்ப்பங்களில் மக்கள் மீது அடக்குமுறை திணிக்கப்படுகிறது. கம்யூனிஸ்ட்டுகளோ அதை விலை கொடுத்து வாங்குகின்றனர்.

கருணாநிதி அரசு ஏவிவிட்ட குண்டர் தடுப்புச் சட்டத்தை எதிர்கொள்ள முடியாத விடுதலைச் சிறுத்தைகள், ஆள்பவர் அரசியலில் சரணடைந்து, தங்களைக் காத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களைக் கைவிட்டார்கள்.

சி.பி.எம். கட்சியின் லீலாவதி மதுரை ரவுடிகளை எதிர்த்து உயிர் நீத்தார். போலிகளின் கட்சியோ அவரது குடும்பத்தை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியதன் மூலம் தனது பாதுகாப்பான பாதையை உறுதி செய்து கொண்டது. கள்ளச் சாராய எதிர்ப்பில் மகளையும், அக்காவையும் பலி கொடுத்தும் கலங்காதவர் பீமன் தோப்பில் யசோதா. படிப்பறியாத இந்த வீரப் பெண்மணியை இயக்கும் தன்னார்வக் குழு தலைமை 'சாராய ஒழிப்புக்கு தேவை நல்ல போலீசு' என்று ஒப்பாரி வைக்கிறது.

www.padippakam.com

நிலைமைகளின் நிர்ப்பந்தத்தாலும், தங்கள் சொந்த நேர்மையினாலும் உணர்வூட்டப்பட்ட ஓட்டுக் கட்சிகளின் அணிகள் தம்மையே தியாகம் செய்யத் துணிந்தாலும், பிழைப்பு வாதம் எனும் நோக்கம் தலைமைகளை நிர்ப்பந்திக்கிறது; சரணடையக் கோருகிறது.

உண்மையான கம்யூனிஸ்டுகளோ தாங்கள் அழிக்கப்படுவதைக் காட்டிலும் அநீதியான இந்த சமூக அமைப்பு அழிக்கப்படுவது பற்றியே அதிகம் அக்கறை கொள்கிறார்கள்.

புதிய கலாச்சாரமும், புதிய ஜனநாயகமும் பேருந்தில் விற்கப்படுவது ஒரு வியாபாரத்தைப் போன்று எளிதல்ல. 'சூப்பர் ஸ்டாருக்காக' ஓட்டுக் கட்சிகள் தவமிருந்த நேரத்தில் 'ரஜினி ஒரு கழிசடை' என்ற நூலை விற்பதும், கூட்டத்தில் பேசுவதும் சாதாரணமல்ல. 'பார்ப்பன இந்து மத வெறியை முறியடிப்போம்' என்று 'இந்துக்களிடம்' நிதி வசூல் செய்வது சுலபமல்ல. 'போலீசு அராஜகம் ஒழிக' என்ற சுவரெழுத்தை போலீசின் கண்முன்னே எழுதுவது எளிதல்ல; சினிமா இசையில் மூழ்கியிருக்கும் இதயத்தை, மக்களிசை ஒலிப்பேழைகளைக் கேட்க வைப்பது வெறும் தந்திரமல்ல. சாதி உணர்வில் மூழ்கியிருக்கும் ரத்த உறவைக் காயப்படுத்தாமல் சாதி மறுப்பு மணங்கள் கைகூடுவதில்லை. ஆதிக்க சாதியினர் ஊர்களில் அவர்களைக் கண்டித்து பேசுவது பாதுகாப்பானதல்ல. ஒவ்வொரு போராட்டத்திலும் வேலையிழக்கும் தோழர்களுக்கு பொருளாதார வாழ்க்கை நிச்சயமல்ல.

மக்கள் கலை இலக்கியக் கழகம்
விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
இணைந்து நடத்தும்

**சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்**

செப் - நவ '97

- தமிழகமெங்கும் பொதுக்கூட்டங்கள்
- 30.10.97: தீபாவளியன்று சாதியத்தைப் போதிக்கும் வேத புராணக் குப்பைகளைக் கொளுத்தும் போராட்டம்
- தனித் தேநீர்க் குவளை கோயிலில் நுழையத் தடை போன்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராக உள்ளூர் அளவிலான போராட்டங்கள்
- 7.11.97: நவம்பர் புரட்சி நாளில் விழுப்புரத்தில் சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழா
- 10.11.97: மதுரையில் பேரணி - பொதுக்கூட்டம்

எங்களை அவதூறு செய்யும் விடுதலைச் சிறுத்தைகளின் கூட்டத்தில் கேள்வி கேட்பதும் - பார்ப்பனியத்துடன் சமரசம் செய்த வீரமணியைக் கேள்வி கேட்டு தி.க. மாநாட்டில் பிரசுரம் விநியோகிப்பதும் - இந்து முன்னணியை அம்பலப்படுத்தி அவர்கள் ஊர்வலத்திலேயே பிரசுரம் கொடுப்பதும் - போலிக் கம்யூனிஸ்டுகளை தூக்கி எறியுமாறு அவர்கள் ஊர்வலத்திலேயே அணிகளுக்கு அறைகூவல் விடுப்பதும் - அடி உதை வாங்காமல் நடந்தேறுவதில்லை. ஆம். இத்தனைச் சிரமங்களையும் தாண்டாமல் மக்கள் திரள் வேலை - அரசியல் வெற்றி பெறுவதில்லை.

அப்படித்தான் எங்கள் வெற்றிகள் சாதிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் மாபெரும் ஓட்டுக் கட்சிகளின் பத்திரிகைகள் கூட சந்தாக்களை வைத்து சடங்குக்காக நடத்தப்படும் போது, எமது பத்திரிகைகள் மக்களிடையே விற்கப்பட்டு அவர்கள் விரும்பி வாங்கும் இதழ்களாக வெளிவருகின்றன. எமது போராட்ட, பிரச்சார நிதித் தேவைகளுக்கு மக்களைச் சார்ந்தே இருக்கிறோம். எந்தப் பிரச்சினைக்கும், எத்தனை முறை சென்றாலும் மக்கள் சலிப்பதில்லை; அன்புடன் அள்ளி வழங்குகிறார்கள். எமது வெளியீடுகளும் - ஒலிப்பேழைகளும் பல்லாயிரம் எண்ணிக்கையில் வெளிவந்து இலட்சக் கணக்கான மக்களிடம் சென்றிருக்கின்றன.

'மே தினம்' என்றாலே ஆளும் வர்க்கங்கள் வெறுக்கும் வகையிலும் - மக்களுக்கு அறைகூவல் விடும் வகையிலும் நடத்தப்படும். எமது மே தினப் போராட்டங்கள் கம்யூனிஸ்டுகளின் அரசியல் மரபை மீட்டிருக்கின்றன. ஆண்டு தோறும் உறுப்பினர்களின் சாதி மறுப்பு மணங்களை திட்டமிட்டு நூற்றுக் கணக்கில் நடத்தி வரும் அமைப்பு தமிழகத்தில் எங்களுடையது மட்டுமே. தாழ்த்தப்பட்ட மக்கள் சிறுபான்மையாகவும் - ஆதிக்க சாதி பெரும்பான்மையாகவும் உள்ள இடங்களில் மேல் சாதி வெறியை எதிர்த்து, மோதி இயக்கம் எடுக்கும் துணிவும் - தெளிவும் உள்ள ஒரே அமைப்பு தமிழகத்தில் எம்முடையதுதான். வீரமணியின் தி.க.வையும், போலி கம்யூனிஸ்டுகளையும், தலித் பிழைப்புவாதிகளையும் கொம்பைப் பிடித்து உலுக்குபவர்கள் நாங்கள் மட்டுமே. இந்து மதவெறி எதிர்ப்பையும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் செயலூக்கத்துடன் மக்களிடம் கொண்டு செல்வது எமது அமைப்புகளே.

இப்படித்தான் எமது மக்கள்திரள் அரசியல் வேலை வெற்றி பெறுவதும், எமது தோழர்கள் மாறுவதும் தொடர்கிறது. எதிரியின் நிலையுடன் ஒப்பிட்டால் இவ்வெற்றிகள் சிறு துளியே என்பதறிவோம். அதனால்தான் வெற்றிகளும் - இழப்புகளும் எங்களை அசைப்பதில்லை. எமது நீண்ட கால இலக்கினை விரைவுபடுத்தும் அளவு எங்கள் வேலை போதவில்லை என்பதே எமது சுயவிமரிசனம்.

தோழர் செல்வராசின் போர்க்குணம், உணர்வு குன்றிய அனைவர் மீதும் தொடுக்கப்பட்ட விமரிசனம். மக்கள் திரள் பாதையில் அமைக்கப்பட்டதோர் படிக்கட்டு அவரது தியாகம். இந்தப் படிக்கட்டில் கால் வைத்துக் கலங்கிய கண்களுடன் முன்னே செல்கிறோம். அடுத்த படிக்கட்டுகளில் எதிரிகள் கண்ணீர் சிந்த நேரிடலாம்.

மகனின், சகோதரனின், நண்பனின் பிரிவைக் காட்டிலும் ஒரு தோழனின் பிரிவு கொடியது. இது எமக்கு ஆறாத்துயர்தான். எனினும், தோழர் செல்வராசின் உறக்கம் மீளா உறக்கமல்ல.

**தோழர் செல்வராசின் போர்க்குணம், உணர்வு குன்றிய அனைவர் மீதும் தொடுக்கப்பட்ட விமரிசனம். மக்கள் திரள் பாதையில் அமைக்கப்பட்டதோர் படிக்கட்டு அவரது தியாகம். இந்தப் படிக்கட்டில் கால் வைத்துக் கலங்கிய கண்களுடன் முன்னே செல்கிறோம். அடுத்த படிக்கட்டுகளில் எதிரிகள் கண்ணீர் சிந்த நேரிடலாம்.**

இதோ, அமெரிக்க நாய்களை அடித்து விரட்டும் மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான இயக்கத்திற்குப் புறப்படுகிறோம். தோழர் செல்வராசுவும் உடன் வருகிறார். இந்த முறையும் அவர் ஒரு முகம் தெரியாத தோழர்தான். ஏனெனில், அவர் முன்னே செல்கிறார். கண்ணீரைத் துடைத்தபடியே அவருடைய காலடித் தடத்தில் நாங்கள் பின்தொடர்கிறோம்.

• இளநம்பி

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசை விழா - 2001

## சில பதிவுகள்






| | | | |
|---|---|---|---|
| தலைமையுரை: தோழர் காளியப்பன், ம.க.இ.க. | முதன்மையுரை: தோழர் கதிரவன், ம.க.இ.க. | சிறப்புரை: தோழர் மருதையன், ம.க.இ.க. | மாலை நிகழ்ச்சியில் வாழ்த்துரை: தோழர் நாராயணன், வி.வி.மு. |

⇧ முதன்மையுரையில் தோழர் கதிரவன் ஏகாதிபத்தியச் சீரழிவுப் பண்பாட்டையும் அதன் இந்திய எடுபிடிகளையும் சாடினார்; சிறப்புரையாக தோழர் மருதையன் பொழுது போக்கிலும் இசையிலும் நாம் நாட வேண்டியது புத்துணர்ச்சியையா, புதிய உணர்வையா என்பது குறித்துப் பேசினார்.



பார்ப்பனியப் பண்பாட்டுப் படையெடுப்புக்கு எதிராக - ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. இணைந்து காலையில் தஞ்சை முக்கியச் சாலையில் நடத்திய எழுச்சிப் பேரணி. ⇨




காலைக் கருத்தரங்கில்: (இடமிருந்து) சிதம்பர இரகசியத்தை உடைத்து அவ்வூரை சாங்கிய மையமாகக் காட்டிய முனைவர். அரங்கராசன், ஈரோடு மற்றும் முனைவர். இராசு; தமிழிசைக் கருவி வகைகள் பற்றி முனைவர். இ. அங்கயற்கண்ணி, தஞ்சை; இசைக் கலைஞனின் அகஎழுச்சி பற்றி இசைவாணன், திரைப்பட இசையமைப்பாளர். ⇨

படிப்பகம்

www.padippakam.com

சாம்பான் - நாடகம் : பார்வையாளரின் நெஞ்சில் சாதி எதிர்ப்புத் தீ மூட்டிய உணர்ச்சிப் பிழம்பான பறை இசைக் கலைஞனின் கதை. ஆக்கம்: ஒத்திகை நாடகக் குழு - தஞ்சை. ⇨




மிக மிகப் பெரிய்ய ஊழல் புராணம்: வில்லுப்பாட்டு. ஆக்கம்: ஆத்தூர் கோமதி குழுவினர், நெல்லை. ⇨




இது திரைப்பட வெண்ணிற ஆடை ஆபாசக் குலுக்கல் நடனமல்ல; சொந்த இதயத் துடிப்பையே இயற்கை ஓவிய மாகத் தீட்டினார்கள் நீலகிரி மலைமக்கள். ஆட்டம்: படுகர் - தொரையர் இனக் குழு, கோத்தகிரி. ⇨




கட்ட பொம்மனை இன்று எட்டப்பன் சந்தித்தால்.....
மேடை நாடகம்: வி.எம். முருகப்பா குழுவினர், திண்டுக்கல். ⇨



படிப்பகம்

www.padippakam.com

# கும்பமேளா:
# மதமா, அரசியலா, வர்த்தகமா?

ஐயாயிரம் போலீசார், 500 சப்-இன்ஸ்பெக்டர்கள், 45 இன்ஸ்பெக்டர்கள், 46 டி.எஸ்.பி.க்கள், 10 சூப்பிரெண்டெண்டுகள்; 23 கம்பெனி அளவு கொண்ட பிராந்திய ஆயுதப் படையினர், 40 கம்பெனி - மத்திய மாநில ஆயுதப் போலீசார் பணியாற்றுகின்றனர்.

5000 தற்காலிகக் கூடாரங்கள், 145 கி.மீ. குடிநீர்க் குழாய்கள், 450 கி.மீ. மின்சாரக் கம்பிகள், நூற்றுக் கணக்கான மருத்துவமனைகள், ஆம்புலன்சுகள், மருத்துவர்கள்...

இவையெல்லாம் குஜராத் நிலநடுக்கத்தையொட்டி அரசாங்கம் செய்திருக்கும் நிவாரண ஏற்பாடுகளல்ல. கும்பமேளாவின் நிர்வாக ஏற்பாடுகள்.

நாட்டின் மேற்குப் பகுதி நிலநடுக்கத்தால் மரண ஓலமிடும்போது, வடக்குப் பகுதி மரணத்துக்குப் பிந்தைய பரலோக வாழ்வை எண்ணிக் கவலை கொண்டு "ஹர ஹர மகாதேவா" என்று கூச்சலிடுகிறது.

சாவுக்கு அஞ்சி வீட்டிலிருந்து வெளியேறி நடுங்கும் குளிரில் தெருவில் அமர்ந்திருக்கிறார்கள் குஜராத் மக்கள். சாவுக்குப் பின்னர் சொர்க்கத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நடுங்கும் குளிரில் கங்கைக் கரையில் விரதமிருக்கிறார்கள் கும்பமேளா பக்தர்கள். இப்படியொரு கேலிக்கூத்தை வேறெங்கே காண முடியும்?

"மதம் மக்களுக்கு அபின்" என்றார் மார்க்ஸ். ஆனால் சாமியார்களுக்கு? அபின்தான் சாமியார்களுக்கு மதம். தங்களைக் காணவரும் வெளிநாட்டு பக்தர்களுக்கு பரமசிவனின் பிரசாதம் என்று கஞ்சாவை விநியோகிக்கிறார்கள். கஞ்சா போதையில் நிர்வாண நடனம் ஆடுகிறார்கள்.

கதகதப்பான சொகுசான கூடாரத்தில் தங்கி உறங்கி, யானைகள், குதிரைகள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் ஊர்வலமாகச் செல்ல நீராடுவதற்குப் பல்லக்கில் பவனி வருகிறார்கள்.


கையில் வாளும் சூலமும் ஏந்தி ஓவென்ற பேரிரைச்சலுடன் மக்களை மிரட்டித் துரத்தியபடியே எருமை மாட்டைப் போல கங்கையில் விழுந்து ஆற்றைக் கலக்குகிறார்கள் அம்மணச் சாமியார்கள்.

முப்பது ஆண்டுகளாக வலது கையை உயர்த்தி வைத்தபடியே தவமிருக்கிறார் ஒரு சாமியார். அவர் நினைத்தாலும் கையை இறக்க முடியாது என்ற உண்மை ஒருபுறமிருக்க அதை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம். மவுனச் சாமியார், இரண்டடி சாமியார், ஆண்குறியை வாளால் முறுக்கும் சாமியார், ஆண் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் சாமியார்... எல்லோரையும் வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம்.

வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்களின் காமெராக்களோ அம்மணத்தைத் தேடியே அலைந்து கொண்டிருந்தன. ஹாலிவுட் நடிகைகளின் அம்மணத்தை மட்டுமே கண்டு களித்திருந்த



காதில் செல்போன், கையில் - பில்டர் சிகரெட் - வாயில் ஓம் நமச்சிவாய!






சொர்க்கம் - நரகம்: நட்சத்திரக் குடில்களும் நட்சத்திரம் தெரியும் ஓட்டைக் குடில்களும்

படிப்பகம்

www.padippakam.com



**மிதவைப் பாலங்கள்:** பிரம்மாண்டமான கங்கை, யமுனை நதிகளின் குறுக்கே இதுபோன்ற 24 மிதவைப் பாலங்களை அமைத்திருக்கிறது ராணுவம். கிராமங்களுக்குச் சாலை அமைக்கக் காசில்லை எனக் கூறும் அரசின் 'பெருந்தன்மை' இது. 'மதச்சார்பற்ற' இந்திய அரசு கும்பமேளாவுக்கு செலவிட்டதாகக் கூறும் தொகை 175 கோடி. உண்மையான செலவு - பாலத்தை வைத்து மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்!

தங்கள் ரசிகர்களுக்குச் சாமியார்களின் அம்மணத்தைத் தரிசிக்கும் வாய்ப்பை வழங்க நாயாய் அலைந்து கொண்டிருந்தன வெளிநாட்டுத் தொலைக்காட்சிக் காமெராக்கள்.

இன்றைய் தாராளமய காலத்தில் அம்மண சாமியர்களைப் படம் பிடித்து உலகெங்கும் ஒளிபரப்புவது, நம் ஜனநாயகத்தின் பெருமையை உலகறியச் செய்யும் என்று ஒரு பிரிவு அறிவாளிகளும், நம்மைக் காட்டு மிராண்டிகளின் தேசம் எனக் கருதுவார்கள் என இன்னொரு பிரிவு அறிவாளிகளும் இந்தியப் பத்திரிகைகளில் லாவணி நடத்திக் கொண்டிருந்தார்கள்.

''கமர்ஷியல் வாழ்க்கையையும் சாதுக்களின் ஆன்மீக வாழ்க்கையையும் ஒரே கண்ணால் பார்க்கக் கூடாது. பத்திரிகையில் இப்படி ஒரு படம் வந்ததால்தான், சாதுக்கள் என்பவர்கள் யார், மகா நிர்வாணம் எப்படி ஏற்படுகிறது என்பன போன்ற கேள்விகளுக்கு குழந்தைகளுக்கு விளக்கமளிக்கும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது'' என்று வாசகர் கடிதம் எழுதினார் ஒரு தினமணி வாசகர்.

ஆனால் கும்பமேளாவின் சாமியார்களோ தங்கள் வெளிநாட்டு பக்தர்களுக்கு வேறுவிதமாக உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். ''ஹாலிவுட் அம்மணமும் ஆன்மீக அம்மணமும் ஒன்றே - பெப்சியும் கஞ்சாவுமே பேரின்பத்தின் திறவுகோல்கள்'' என்று தங்கள் நடைமுறை மூலம் காட்டிக் கொண்டிருந்தார்கள். டாலரில் காணிக்கை செலுத்தக் கூடிய வெளிநாட்டு சீடர்களை வலைவீசித் தேடிக் கொண்டிருந்தார்கள்.

இணையத் தளங்கள் பல கும்பமேளாவின் பெயரில் உருவாக்கப்பட்டு பாவத்தைக் கழுவும் சுலோகங்கள், பாபாக்களின் லீலைகள் எல்லாம் விளம்பரமாகிக் கொண்டிருந்தன. இணைய வணிகத்தின் மூலம் ''101 டாலர் செலுத்தினால் ஒரு செம்பு கங்கை நீர்'' என்று ஹரே கிருஷ்ணா இயக்கம் இணையத்தில் கூவிக் கொண்டிருந்தது.

சர்வதேச சுற்றுலா நிறுவனமான ''காக்ஸ் அண்டு கிங்ஸ்'' இந்திய அரசு அந்நியச் செலவாணி ஈட்ட புதிய யோசனை சொல்கிறது. தகவல் தொழில் நுட்பத்தைக் காட்டிலும் அதிகமாக ஆன்மீக வியாபாரத்தில் இந்தியா அந்நியச் செலாவணி ஈட்ட முடியும் என்கிறார் அதன் இயக்குநர். நல்ல யோசனைதான் என்று அதனை வழிமொழிகிறது டைம்ஸ் ஆப் இந்தியா தலையங்கம்.

தனது ஆலோசனையை நடைமுறையில் செய்து காட்டுவது போல ஒரு நாளைக்கு 12,000 ரூபாய் வாடகையில் ஐந்து நட்சத்திரக் கூடாரங்களை அமைத்திருக்கிறது காக்ஸ் அண்டு கிங்ஸ் நிறுவனம். ஷெரான் ஸ்டோன், டெமி மூர், மடோனா போன்ற ஹாலிவுட் நட்சத்திரங்கள் கும்பமேளாவில் குளிக்கப் போகிறார்கள் என்ற வதந்தியையும் கிளப்பி விட்டது.

கங்கையில் குளித்து பாவத்தைப் போக்கிக் கொண்டு டெமிமூரின் குளியல்



**குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்:** கையில் ஆயுதங்களுடன் அம்மணமாக கங்கையில் இறங்குகிறார்கள் நாகா சாமியார்கள். யார் முதலில் குளிப்பது என்று சாமியார் கும்பல்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதும், மக்களைத் தாக்குவதும் வாடிக்கை. இவர்களுக்குப் பெயர்தான் சாதுக்கள்!

படிப்பகம்

www.padippakam.com



**மழித்தலும் நீட்டலும்:** புதிதாகத் துறவறம் மேற்கொள்ளும் நாகா சாமியார்கள். தாராளமயமாக்கத்தின் விளைவாக வேலையின்மை அதிகரித்து விட்டதால் இளம் சாமியார்களின் எண்ணிக்கையும் கூடி வருகிறதாம். பொருளாதார நெருக்கடி உணர்வுள்ளவர்களைப் போராளிகளாக்குகிறது; திக்கற்றவர் களைத் தற்கொலைக்குத் தள்ளுகிறது; சிலரை கிரிமினல் களாக்குகிறது; சிலரை சாமியாராகவும் ஆக்குகிறது போலும்!

காட்சியையும் ரசித்து விடலாம் என்று ஹாலிவுட் பக்தர்கள் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கக் கிளம்பிவிட்டார்கள்.

இன்னொரு புறம் இந்துஸ்தான் லீவர், கோல்கேட் நிறுவனங்கள் அழகு சாதனங் களையும் பற்பசையையும் இலவசமாக விநியோகித்து பக்தர்களை நுகர்வோராக மாற்றிக் கொண்டிருந்தன. ஃபேர் அண்டு லவ்லி கிரீமை வாழ்க்கையிலேயே பயன்ப டுத்திப் பார்த்திராத கிராமத்துப் பெண்கள் கிறங்கிப் போய் நின்று கொண்டிருந் தார்கள்.

பக்தர்களை பாரதிய ஜனதாவின் வாக்கு வங்கியாக மாற்ற விசுவ இந்து பரிசத் முயன்று கொண்டிருந்தது. அயோத் தியில் கட்டவிருக்கும் ராமர் கோயிலின் மாதிரியை சிறியதாக செய்து வைத்து, இல வசமாகப் படங்களை விநியோகித்துக் கொண்டிருந்தது. தர்ம சன்சாத் எனும் சாமியார் கூட்டத்தைக் கூட்டி கோயில் கட்டியே தீருவோம் என்று ஒலிபெருக்கி வைத்து அலறிக் கொண்டிருந்தது.

பீதியடைந்த சோனியா காந்தி இந்துக் களின் ஓட்டுக்களை மனதிற் கொண்டு தானும் கங்கையில் ஒரு முழுக்குப் போட்டார்.

இவையெதற்கும் தொடர்பில்லாமல் லட்சக் கணக்கான மக்கள் நாள் முழுவதும் விரதமிருந்து, நடுங்கும் குளிரில் கங்கையில் குளித்துத் தங்கள் பாவத்தைக் கழுவ முயன்று கொண்டிருந்தார்கள்.

★ ★ ★

கும்பமேளா என்பது என்ன? பக்தியா, ஆன்மீகமா, மதமா, அரசியலா, வர்த்தகமா - இவை எல்லாமுமா? "உலகத்தின் மிகப் பெரிய கிறுக்குத் திருவிழா" என்று இதை வருணித்தது ஒரு லண்டன் பத்திரிகை. "இந்தியாவை நுண்ணோக்கியில் பார்க்க வேண்டுமா - கும்பமேளாவுக்குச் செல்லுங்கள்" என்று இன்னொரு பத்தி ரிகை.

அனைவரையும் விட கும்பமே ளாவைக் கூர்மையாக விளக்கியவர் பிர தமர் வாஜ்பாயிதான். "இந்திய ஜனநாய கத்தின் தேர்தல் என்பது ஒரு கும்பமேளா" என்றார் வாஜ்பாயி.

ஒரு பொதுத் தேர்தல் களத்தை மனதில் வைத்துக் கொண்டு கும்பமேளாவைக் கவ னியுங்கள். அம்மணச் சாமியார்களின் இடத்தில் அரசியல்வாதிகள்; பக்தர்களைக் கவர அவர்கள் செய்யும் கிறுக்குத்தனங்கள். அரசியல்வாதிகளின் பரபரப்பு அறிக் கைகள்; 'புனிதமான' கங்கையின் இடத்தில் 'புனிதமான' ஜனநாயகம், அப்பாவி பக்தர் களே ஏமாளி வாக்காளர்கள்.

உருமாற்றம் அடையாமல் அதே வேடத்தில் வருபவர்கள் - போலீசுக் காரர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் விசுவ இந்து பரிசத்.

ஒப்பீடு எவ்வளவுதான் பொருந்தி வந்தாலும் தேர்தலை ஒப்பிடும்போது கும்ப மேளாவை அவ்வளவு பெரிய மூடநம் பிக்கை என்று சொல்லிவிட முடியாது.

• சூரியன்

**அமெரிக்காவிலிருந்து விமானமேறி கங்கைக்கரைக்கு வந்து கண்டுபிடித்த ஆன்மீகம் - கஞ்சாப் புகைதானா?**



www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி:

# ஜெ.ஜெ. சில குறிப்புகள்

# இதுதாண்டா கைக்கூலிக் கலை

கம்யூனிசத்தின் மீது அதிகரித்துவரும் வெறுப்பு - ஆத்திரத்தின் காரணமாக ஒரு ''படைப்பிலக்கியவாதி'' என்கிற போர்வையைக்கூட உதறிவிட்டு அம்மணமாக நிற்கிறார் ஜெயமோகன்.

முதலாளித்துவச் சிந்தனையாளர்களின் கருத்துப்படி, சிறந்த கலை, இலக்கியப் படைப்புகள் என்றால் அவற்றில் பிரச்சார வாடை வீசக்கூடாது; ஒரு படைப்பாளி தனது அரசியல், சமூகப் பார்வையை புகுத்தினால் அது உன்னதமான படைப்பாக இருக்க முடியாது.

இதன் பொருள் என்னவென்றால் உள்ளே புகுத்தப்பட்டிருக்கும் பிரச்சாரம், ஊடாடி இருக்கும் அரசியல், சமூகப் பார்வை வெளியே தெரியாதவாறு மூடி மறைக்கப்பட்டிருப்பவையே உன்னதமான கலை, இலக்கியப் படைப்புகள். தனது சொந்த அரசியல், சமூகக் கருத்துக்களை படைப்புகளுக்குள் ஒளித்து வைப்பதில் மிக அதிகத் திறமை காட்டுபவரே மிகச் சிறந்த படைப்பாளி.

முதலாளித்துவத்தைப் பொருத்தவரை கலை, இலக்கியம்தான் மிகவும் சக்தி வாய்ந்த பிரச்சார வடிவம் என்பதுதான் உண்மை. ஏனென்றால் படைப்பாளிகளின் கற்பனை, சுதந்திரம் என்கிற பெயரால் கலை இலக்கியப் படைப்புகளின் நியாயத்தை - உள்ளடக்கத்தை நிறுவ வேண்டிய அவசியமில்லை. காட்சிகள் - வர்ணணைகள், நிகழ்வுகள் - உணர்வுகளைத் தந்திரமாக நகர்த்தி முதலாளித்துவப் படைப்பாளிகள் தமது அரசியல், சமூகப் பார்வையை ஒளித்து வைக்கிறார்கள்.

இந்த வகையில் கூட ஜெயமோகன் படுதோல்வி காணும் படைப்பாளியாகவே விளங்குகிறார். இதற்குக் காரணம் அவரது இந்துத்துவா ஆதரவு, கம்யூனிச எதிர்ப்பு வெறிதான். பார்ப்பனிய சார்புச் சிறுகதையாளராகத் தொடங்கிய ஜெயமோகன், தனது முதல் நாவலிலேயே பார்ப்பனரல்லாதாரின் மீதான காழ்ப்போடு வெளிவந்தார். இரண்டாவது நாவலில் இந்துத்துவா போதகரானார். மூன்றாவது நாவலில் கம்யூனிச எதிர்ப்புப் போராளியாக அவதாரம் எடுத்தார். உடனேயே வெறி தலைக்கேற, படைப்பாளி என்ற போர்வையை உதறிவிட்டு அரசியல் கட்டுரையாளனாகி விட்டார்.

பாரதீய ஜனதா - தி.மு.க. கூட்டணியின் ஊதுகுழலான தினமணியில், கம்யூனிசத்தை அம்பலப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு, இரண்டு தலையங்கப் பக்கக் கட்டுரைகளைத் தீட்டியுள்ளார், ஜெயமோகன். ''தேசபக்தப் புரட்சிப் பாரதி''யின் கவிதைகளில் ஒளிந்து கிடக்கும் இந்துத்துவா பார்வையை அவரது கட்டுரைகளே அம்பலப்படுத்திவிட்டன. அதைப்போலவே படைப்பாளி ஜெயமோகனுக்குள் மறைந்திருக்கும் கம்யூனிச வெறுப்பை அவரது இந்த இரண்டு கட்டுரைகளுமே வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. இவற்றுக்கும் சில போலிக் கம்யூனிஸ்டுகள் எழுதிய மறுப்பும்கூட அதே தினமணியில் வந்துள்ளன.

ஜெயகாந்தனின் சீரழிவுப் பார்வை குறித்து மென்மையான அணுகுமுறையைக் கையாண்ட போலிக் கம்யூனிஸ்டுகள் தம்மைக் குறிவைத்துத் தாக்குவதனால் ஜெயமோகனை ஏகாதிபத்திய ஏஜெண்டு, ஆளும்வர்க்க சூழ்ச்சிக்காரன் என்று சாடுகிறார்கள். ஜெயமோகனுக்கும் தெரியும் சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம். ஆகிய கட்சிகள் உண்மையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அல்ல வென்று. மார்க்சிய - லெனினியத்தின் சாரத்தை இந்தக் கட்சிகள் ஏற்று செயல்படுத்துவன அல்ல; பிற முதலாளித்துவக் கட்சிகளைப் போன்றவைதாம். பிற முதலாளித்துவக் கட்சிகளைவிடக் கூடுதலான வாக்குறுதிகளை வாரி வழங்கும் போலிக் கம்யூனிசக் கட்சிகள் அவை உண்மையாக நிறைவேற்றப்படும் என்று மக்களையும் அணிகளையும் நம்பவைத்து மோசடி செய்பவர்கள். இதுவும் ஜெயமோகனுக்குத் தெரியும்.

> ***முதலாளித்துவத்தைப் பொருத்தவரை கலை, இலக்கியம்தான் மிகவும் சக்தி வாய்ந்த பிரச்சார வடிவம் என்பதுதான் உண்மை. ஏனென்றால் படைப்பாளிகளின் கற்பனை, சுதந்திரம் என்கிற பெயரால் கலை இலக்கியப் படைப்புகளின் நியாயத்தை - உள்ளடக்கத்தை நிறுவ வேண்டிய அவசியமில்லை. காட்சிகள் - வர்ணணைகள், நிகழ்வுகள் - உணர்வுகளைத் தந்திரமாக நகர்த்தி முதலாளித்துவப் படைப்பாளிகள் தமது அரசியல், சமூகப் பார்வையை ஒளித்து வைக்கிறார்கள்.***

இருந்தாலும், இந்தப் போலிகளையே கம்யூனிசக் கட்சி என்று பாவித்து, இவர்களின் சீரழிவுகளை சான்றுகளாக் காட்டி ஒட்டுமொத்தமாகக் கம்யூனிச இயக்கத்தையே கொச்சைப்படுத்துகிறார் ஜெயமோகன்.

இடதுசாரிக் கூட்டணிக்குத் தலைமையேற்றுக் கேரளத்தை ஆளும் சி.பி.எம். கட்சி அம்மாநில முன்னணி சினிமா நடிகர்களை முன்னிறுத்தி ''மலையாளம்'' என்ற ஒரு தொலைக்காட்சி அலைவரிசையைத் துவங்கியிருக்கிறது. அந்தக் கட்சியின் முக்கியப் பிரமுகர்களை நிர்வாகிகளாகக் கொண்ட ''மலபார் டூரிசம் டெவலப்மெண்ட் கோஆபரேடிவ் சொசைட்டி'' (மலபார் சுற்றுலா வளர்ச்சி கூட்டுறவு சங்கம்) என்ற நிறுவனத்தையும் தொடங்கியிருக்கிறார்கள். முதலில் கண்ணூரிலும் பிறகு மலபார் கடற்கரை நகரங்கள் பலவற்றிலும் மாபெரும் சுற்றுலாத் தலங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

சி.பி.எம். தொடங்கிய வானொளி அலைவரிசையில் பெரும் பகுதி பொழுதுபோக்கு விடயங்கள் நிரம்பியிருக்கும்; அக்கட்சி தொடங்கும் சுற்றுலாத் தலங்களில் வேடிக்கைப் பூங்கா, உணவகங்கள், கடல்மீது கயிற்றுப்பாலம், கடலில் நீர்ச்சறுக்கு ஆட்ட வசதிகள், ஆயுர்வேத சிகிச்சையோடு ''மசாஜ்'' நிலையம் தென்னை மரக் கள் புட்டிகள், ஐந்து நட்சத்திர விடுதிகள் போன்றவை அமைக்கப்படும். இதற்காக அரசு நிலம், நிதி ஒதுக்கப்படுவதோடு இத்திட்டப் பங்குகள் வெளிநாடுகளில் விற்கப்படும். ஓர் அரசியல் இயக்கம் இம்மாதிரியான வணிக முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் தவறானது. அடிப்படையான கொள்கையில் இருந்து விலகவே இது வழிவகுக்கும் என்று சி.பி.ஐ. கண்ணனூர் மாவட்ட செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆயுள் காப்பீட்டு நிதியில் சேருவது சமூகப் பொருளாதார மாற்றத்தை மறுதலிப்பதாகும் என்பதால், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கம்யூனிஸ்டு தலைவர் அதில் சேர மறுத்துவிட்டார். இன்றோ நூறு கோடி ரூபாய்க்கு கட்சியே காப்பீடு செய்துள்ளது.

இவற்றைச் சுட்டிக் காட்டும் ஜெயமோகன், போலிக் கம்யூனிஸ்டுகளிடம் சில

படிப்பகம்

www.padippakam.com

கேள்விகளை எழுப்புகிறார்.

''இனிமேல் கம்யூனிஸ்டு கட்சி ஒரு போராட்டக் கட்சி இல்லையா? வணிகமும் போராட்டமும் ஒரே சமயம் செய்வது சாத்தியமா? வேறு ஒரு பொருளாதார அமைப்பு குறித்தும் வேறு ஒரு சமூகக் கட்டுமானம் குறித்தும் கட்சி முன்வைத்து வந்த பெரும் கனவு தள்ளுபடி செய்யப்பட்டாயிற்றா?''

இந்தக் கேள்விகளை ஜெயமோகன் கம்யூனிசத்தின் மீது பாசமும், புரட்சிப் போராட்டத்தின் மீது அக்கறையும் கொண்டு எழுப்புகின்றாரா?

''சுற்றுலா என்பது முதலாளித்துவப் பொழுது போக்குத் தொழில். சுற்றுலா வரும் வெள்ளை டாலர் பையர்கள் எவரும் உழைக்கும் வர்க்கமல்ல. அவர்களுக்கு சூதாடவும் மது அருந்தவும் மஸாஜ் செய்யவும் உல்லாசமாக இருக்கவும் வசதி செய்து தந்து குற்றேவல் புரிந்துதான் இடதுசாரி ஆளும் மண், தொழில்வளம் பெற வேண்டுமா? பணியாளர் சீருடை, உதிரச் செங்கொடி நிறத்தில் இருக்குமா? நட்சத்திர ஓட்டல் வாசலில் பல வண்ணக் கொடிகள் மத்தியில் புரட்சிக் கொடியும் பறக்குமா?'' என்று ஜெயமோகன் கேட்கிறார்.


இந்தக் கேள்விகளும் உழைக்கும் வர்க்கத்தின் மீதுள்ள பற்றின் காரணமாகவோ, முதலாளித்துவ வர்க்கத்தின் மீதுள்ள வெறுப்பின் காரணமாகவோ ஜெயமோகன் எழுப்புகிறாரா?

இல்லை. ''இந்துத்துவா'' பார்வையில் விஷ்ணுபுரம் படைத்தவரிடம் ''பின்தொடரும் நிழலின் குரலி''ல் கம்யூனிச எதிர்ப்பை உமிழ்ந்தவரிடம் கம்யூனிசம், புரட்சி, உழைக்கும் வர்க்கத்தின் மீது பற்றும் பாசமும் எப்படி இருக்க முடியும்?

வெள்ளை டாலர் பையர்களுக்கு குற்றேவல் புரிந்து மண் தொழில்வளம் பெறுவதையே பரம்பரை, பாரம்பரியமாக கொண்ட காந்தீய காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வை எதிர்த்து ஜெயமோகன்கள் எப்போதாவது எழுதுகோல் தூக்கியதுண்டா?

இல்லை. ''எங்கள் பரம்பரை, பாரம்பரிய தொழிற்துறைகளில் நீங்கள் எப்படி நுழையலாம்'' என்ற கேள்வியை எதிர்மறையில் எழுப்புகிறார், ஜெயமோகன்.

யாரோ ஒரு மூத்த தோழரிடம் ஐம்பது - அறுபதுகளின் கட்சிக் கடிதங்களைக் கண்டுபிடித்ததாகவும், அவற்றில் இருந்த ஒருவித வேகம் தன்னைத் தாக்கியதாகவும், அவற்றின் உண்மையான தீவிரம் இன்னும்



தன் கதிரியக்கத்தை இழக்கவில்லை என்றும் வழக்கம்போல புளுகுகிறார் ஜெயமோகன்.

''கம்யூனிசக் கட்சிகள் தம்மை புரட்சிப் போராட்ட அமைப்புகள் என்பதாகக் கற்பனை செய்து கொண்டு இரகசியக் கடிதங்கள், இரகசியப் பெயர்கள், விசேடமான குறியீட்டுச் சொற்கள் அடையாளங்கள் எல்லாம் கடைப்பிடித்தார்கள். அந்த உணர்ச்சிகளும் அரசியல் நோக்கங்களும் காலாவதியாகிவிட்டன. பழைய ஆவணங்களைக் காணும்போது ஏற்படும் திகைப்பும் சிரிப்பும்தான் ஏற்படுகிறது,'' என்கிறார்.

''சோவியத் ரஷியாவின் வீழ்ச்சியுடன் புரட்சி குறித்தும் சமூக மாற்றம் குறித்தும் கம்யூனிஸ்டுகள் கொண்டிருந்த எல்லாக் கனவுகளும் அந்தரங்கமாக ரத்து செய்யப்பட்டு விட்டன. நடைமுறைவாதம் நோக்கி அவை சாமர்த்தியமாகத் திரும்பியும் விட்டன'' என்று சொல்லுகிறார் ஜெயமோகன், இந்த மாற்றம் குறித்து பகிரங்கமான விவாதம் ஒன்றும் செய்யாமல் தந்திரமாக

***சோவியத் ஒன்றியத்தில் நடந்த எல்லா கேடுகளும் கம்யூனிசச் ஆட்சியினால் விளைந்தவை, அது வீழ்த்தப்பட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற கம்யூனிச எதிர்ப்புக் கட்சியைச் சேர்ந்தவர், ஜெயமோகன். இந்தக் கட்சியின் ஆசைப் படியே கம்யூனிசத்தின் எதிரிகள் ரசியாவில் ஆட்சியைப் பிடித்து 10 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. ஆனாலும் கம்யூனிச எதிரிகள் வாக்களித்தபடி சுதந்திரம், ஜனநாயகம், சுபீட்சத்தை முன்னாள் சோவியத் ஒன்றியக் குடியரசு நாடுகளில் கொண்டுவர முடியவில்லை. எங்கும் பாசிசப் பயங்கரவாதம், பொருளாதார வீழ்ச்சி, கலாச்சார சீரழிவே ஆதிக்கம் வகிக்கின்றன.***

செய்துவிட்டார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார்.

புரட்சி, போராட்டம், சமூக மாற்றம் குறித்து கம்யூனிசக் கட்சிகள் கொண்டிருந்த கனவு, கற்பனை எல்லாம் பொய்த்துப் போய்விட்டன. ஆனால் அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, பாவமன்னிப்புக் கோரவில்லை என்பதுதான் ஜெயமோகனின் கொதிப்பு!

ஆனால் நடைமுறைவாதம்தான் இந்தக் கட்சிகளின் கொள்கையாக எப்போதுமே இருந்து வந்தது; ஐம்பதுகளின் ஆரம்பத்திலேயே தெலுங்கானா போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து, இனி ஆயுதப் போராட்டம், புரட்சி வழிக்குப் போகவே மாட்டோம் என்று நேரு அரசிடம் மன்னிப்பு எழுதிக் கொடுத்து, துரோகமிழைத்துவிட்ட பிறகு, கம்யூனிஸ்டு கட்சிகளுக்குள் இரகசியங்கள், புரட்சி குறித்த கனவுகள், நோக்கங்கள், உணர்வுகள் எதுவுமே இருந்தது கிடையாது.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் காப்பதற்காகப் பாடுபடும் இக்கட்சிகளிடம், அமைதி வழியிலேயே அரசியல், பொருளாதார, சமூக மாற்றத்தை சாதிக்கப் போவதாக திட்டம் வகுத்துக் கொண்டுள்ள இக்கட்சிகளிடம், பாசிச அவசர நிலை ஆட்சியின் போது கூட தடையோ, கைதோ செய்யப்படாதவாறு நடவடிக்கைகளை வகுத்துக் கொண்டிருந்த இக்கட்சிகளிடம் எப்படிப் புரட்சி பற்றிய கனவும், நோக்கமும் இருக்க முடியும்.

ஆரம்பத்தில் இருந்தே, இரண்டு கட்சிகளுமே மார்க்சியத்தைக் கடைப்பிடித்ததில்லை. ''மண்ணுக்கேற்ற'' - அதாவது இந்திய நிலைமைக்கேற்றது என்று சொல்லிக் கொண்டு திரிக்கப்பட்ட மார்க்சியத்தையே பின்பற்றி வந்திருக்கின்றன. தன் மகனுக்கு தன் சாதிக்கார மணமகளைத் தேடி கட்சிப் பத்திரிக்கையிலேயே விளம்பரம் தரும் மாவட்டச் செயலர், பன்னாட்டு தொழில் கழகங்களின் விளம்பரங்களைத் தாங்கி வரும் பத்திரிகை, சினிமா நட்சத்திரங்களைக் கொண்ட கலைவிழா நடத்தும் அமைப்புகள், தீபாவளி மலர் போட்டு, அதன் மூலம் கருத்துப் பிரச்சாரம் செய்யும் கட்சி - எப்படி புரட்சியை நோக்கமாகக் கொண்டிருக்க முடியும்.

இவையெல்லாம் அறிந்துமே, போலிக் கம்யூனிசக் கட்சிகளை சாக்குவைத்து கம்யூனிசத்தைத் தாக்குகிறார், ஜெயமோகன்.

சோவியத் ஒன்றியத்தில் நடந்த எல்லா கேடுகளும் கம்யூனிச ஆட்சியினால் விளைந்தவை, அது வீழ்த்தப்பட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற கம்யூனிச எதிர்ப்

படிப்பகம்

www.padippakam.com

புக் கட்சியைச் சேர்ந்தவர், ஜெயமோகன். இந்தக் கட்சியின் ஆசைப்படியே கம்யூனிசத்தின் எதிரிகள் ரசியாவில் ஆட்சியைப் பிடித்து 10 ஆண்டுகளுக்கும் மேலாகிறது.

ஆனாலும் கம்யூனிச எதிரிகள் வாக்களித்தபடி சுதந்திரம், ஜனநாயகம், சுபீட்சத்தை முன்னாள் சோவியத் ஒன்றியக் குடியரசு நாடுகளில் கொண்டுவர முடியவில்லை. எங்கும் பாசிசப் பயங்கரவாதம், பொருளாதார வீழ்ச்சி, கலாச்சார சீரழிவே ஆதிக்கம் வகிக்கின்றன.

இந்த உண்மையை ஜெயமோகனே மறுக்க முடியவில்லை. ''இன்றைய ரசியாவில் கருத்துச் சுதந்திரம் - உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன. செய்தி ஊடகங்கள் மீதான அடக்குமுறை ''கிளாஸ் நாஸ்த்''துக்கு முந்தைய நிலையை எட்டிவிட்டது. பத்திரிக்கையாளர்கள் சிறையிலடைக்கப்படுகின்றனர். அந்நாட்டின் காவல் அமைப்புகள் மிக வேகமாக ஏகாதிபத்திய நிர்வாகத்தின் நடைமுறைகளைக் கையாள்கின்றன. அதிகாரப் பரவல்கள் தடுக்கப்பட்டு, அதிபர் மாளிகையிலும், இராணுவத்திடமும் குவிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தில் தனியார் பங்கு - சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டு அரசாங்கத்தின் பிடி இறுகி வருகிறது. முன்பு விவசாயத்தை சீரழித்த கூட்டுப் பண்ணைமுறை மாற்றப்படவோ, முன்னேறவோ இல்லை. மேற்கத்திய சந்தையின் போட்டியைச் சமாளிக்கும் வகையில் மறுஅமைப்பு செய்யவில்லை. மாறாக மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களால் ஊட்டி வளர்க்கப்பட்டு ஒரு வலதுசாரி ஏகாதிபத்திய அரசை நிறுவுவதையே இன்றைய அதிபர் புதின் உத்தேசித்திருக்கிறார்'', என்று தொகுக்கிறார், ஜெயமோகன்.

இதற்கெல்லாம் காரணம் கே.ஜி.பியால் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி தரப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டவரான, இன்னும் உயிருடன் இருக்கும் கே.ஜி.பியின் அதிகாரக் கண்ணிகளின் நம்பிக்கைக்கு உரியவரான ரசிய அதிபர் விளாடிமிர் புதின்தான் என்கிறார், ஜெயமோகன். அவர் மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களால் போஷிக்கப்படுவதாகவும் கூறுகிறார்.

இந்த விளாடிமிர் புதினின் பின்னணியில் ஸ்டாலினுடைய சுயநல ஆட்சிக்காக செதுக்கப்பட்டு, 50 ஆண்டு காலத்துக்கு கட்சி, அரசு, சித்தாந்தம் ஆகியவற்றுக்கு மேலான ஒரு அதிகார அமைப்பாக இருந்து ரசியாவைப் பீதியின் நிழலில் வைத்திருந்த கே.ஜி.பி. இருப்பதாகக் கூறுகிறார், ஜெயமோகன்.

இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருந்த கே.ஜி.பி இன்று மேற்கத்திய பெரும் வணிக நிறுவனங்களின் ஆயுதமாக மாறிவிட்டிருக்கிறது. அதன் நிறம், தோரணை, குரல்தான் மாறியிருக்கிறது. உள்ளூர அதே குரூரமான, கச்சிதமான அதிகார இச்சைதான் குடியிருக்கிறது என்கிறார் ஜெயமோகன்.

அதேசமயம், அந்தக் கே.ஜி.பி.யை எதிர்த்துப் போராடிய கோர்பச்சேவுக்கும், அதை வீழ்த்திய யெல்ச்சினுக்கும் உதவியாக இருந்தவை மேற்கு தேசங்களின் ஊடகங்களும் சித்தாந்த அமைப்புகளும் என்கிறார். மேற்கத்திய அரசுகளை மட்டும் ஏனோ விட்டு விட்டார். கே.ஜி.பி.யினால் தேர்வு செய்து, பயிற்சி தந்து வளர்க்கப்பட்ட, அதன் நம்பிக்கைக்குரிய விளாடிமிர் புதின் ஆட்சிக்கு வர அவைதான் உதவி செய்தன என்கிறார், ஜெயமோகன்.

அப்படியானால், மேற்கத்திய ஊடகங்களும், சித்தாந்த அமைப்புகளும் பன்னாட்டு நிறுவனங்களும் கொண்டுள்ள நோக்கம்தான் என்ன? கே.ஜி.பியின் ஆதிக்கத்தை வீழ்த்துவதில் கோர்பச்சேவ், யெல்த்சின் கும்பலுக்கு உதவின; யெல்திசினின் வாரிசுகள் கே.ஜி.பியின் அடியாள்/ஏஜெண்டு அறிவிக்கப்பட்ட விளாடிமிர் புதின் ஆட்சிக்கு வரவும் உதவின. அவர் மூலம் அதே கே.ஜி.பி. மேற்கத்திய பெரும் வணிக நிறுவனங்களின் ஆயுதமாக மாறிவிட்டது. விசயம் தெளிவாகவே தெரிகிறது. கம்யூனிச எதிரி ஜெயமோகனின் வாக்குமூலமே தெரிவிக்கிறது. கே.ஜி.பி.யை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதுதான் மேற்கத்திய சக்திகளின் நோக்கம்! ''ரசியச் சந்தையின் மீது பெருங்காதல் கொண்டுள்ள மேற்கத்திய பன்னாட்டு வணிக நிறுவனங்களின் செல்லப் பிள்ளையாகவே விளாதிமிர் புதின்-இன்றும் இருக்கிறார்'' என்று ஜெயமோகனே ஒப்புக் கொள்கிறார்.

அப்படியானால் 1980களின் இறுதியிலும் 1990களின் ஆரம்பத்திலும் சோவியத் ஒன்றியத்தில் நடந்தது கம்யூனிச சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயக மீட்புக்கான மாபெரும் எழுச்சி என்று பெருங்கூச்சல் போட்டார்களே, அது உண்மையா?

இல்லை. இனிமேலும் மேற்கத்திய ஏகாதிபத்திய மேலாதிக்க உள்நோக்கங்களை மூடி மறைக்க முடியாது என்பதால், இடதுசாரியோ, வலதுசாரியோ எல்லா சர்வாதிகாரமும் ஒன்றுதான், எதுவானாலும் சுதந்திர சந்தை, சுதந்திர ஊடகம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு எதிரானதுதான் என்கிறார், ஜெயமோகன். இடதுசாரி வலதுசாரிக்கு மேலாகத் தன்னை நிறுத்திக் கொண்டாலும் ''சுதந்திரச் சந்தை, சுதந்திர ஊடகம், ஜனநாயகம்'' என்கிற கோட்பாடே வலதுசாரிகளின் கற்பனைதான்.

ரசியாவில் ''வலதுசாரி ஏகாதிபத்திய'' சர்வாதிகாரத்தை நிறுவும், குரூரமான அதிகார இச்சை கொண்ட கே.ஜி.பியை தனது ஆயுதமாகக் கொண்ட மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்கள் எந்தவகையிலானவை. அவையே நேரடி ஆளும் சக்தியாக அமைந்துள்ள மேலை நாடுகளில் மட்டும் சுதந்திரமான சந்தை, சுதந்திர ஊடகம், ஜனநாயகம் எப்படி நிலவ முடியும்? கம்யூனிச எதிரி ஜெயமோகன் கண்ணுக்கு இது தெரியாததில் வியப்பில்லை.

- முற்றும் -

• மாணிக்கவாசகம்


## உங்களுக்கோர் ஆயுதம்!

*நீங்கள்*
*சமூக அக்கறை கொண்டவரா?*
*ஆம், எனில்*
*புதிய கலாச்சாரம்*
*உங்களுக்கோர் ஆயுதம்!*

*அரசியல் – பண்பாட்டுப்*
*பிரச்சினையை*
*மக்கள் நோக்கிலிருந்தும்*
*மார்க்சிய வலிமையோடும்*
*ஆய்வு செய்து...*
*உண்மை கண்டு...*
*திரைகிழித்து...*
*தீர்வைத் தேடும்*
*புதிய கலாச்சாரம்*
*ஓர் ஆயுதக் கிடங்கு.*

*உங்களுக்கு மட்டுமல்ல...*
*சமூக அநீதி கண்டு*
*சோர்ந்திருக்கும்*
*உங்கள் நண்பர்களுக்கும்*
*அறிமுகப்படுத்துங்கள்.*

*ஆம்...*
*புதிய கலாச்சாரம்*
*உங்களுக்கோர் ஆயுதம்!*

**புதிய கலாச்சாரம்**
**ஆண்டு சந்தா ரூ. 60**
**இரா. சீனிவாசன் பெயருக்கு பணவிடை (MO) அல்லது வரைவோலை (DD) எடுத்து எமது அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.**

www.padippakam.com

இந்திச் சிறுகதை

# ஈத் பண்டிகை

## பிரேம் சந்த்

**1936-ல் மறைந்த பிரேம்சந்த் முற்போக்கு எழுத்தாளர். இந்தி, உருது என்று இரு மொழிகளில் சிறுகதை, நாவல், அரசியல் கட்டுரை ஏராளம் எழுதியவர். விவசாயிகள், தொழிலாளிகள் பற்றி அவர் எழுதாத நாட்களில்லை. வாழ்ந்தால் விவசாயிகளோடு, விவசாய வேலை செய்து கொண்டு அவர்களுக்காகவே போராடி வாழ வேண்டும் என்பார். மனிதநேயம், அன்பு, பிறர் நலன் என்று சிந்திக்கத் தொடங்கி முப்பதுகளில் 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' தொடங்கும் முற்போக்குச் சிந்தனாவாதியாக (தன்னை போல்ஷ்விக் தத்துவத்தை ஏற்றுக் கொண்டவராக 1919-லேயே எழுதியவர்) வளர்ச்சி பெற்றவர்.**

***''நான் ஒரு பாட்டாளி. நான் உழைக்காத அன்று எனக்கு உணவு உண்ண உரிமையில்லை'' என்பாராம் பிரேம்சந்த். அவரது மனைவி கேட்டாராம்: ''அப்படியானால் மண்வெட்டி எடுத்து வேலை செய்யுங்களேன்'' எப்போதுமே அவரிடம் குடிகொண்டிருந்த புன்சிரிப்போடு பிரேம்சந்த் பதில் சொன்னாராம்: ''மண்வெட்டிக்குப் பதிலாகத்தான் பேனாவாலே வேலை செய்யறேனே.''***

ரம்ஜானுக்குப் பிறகு வள்ளிசாக முப்பது நாட்களுக்கு அப்புறம் ஈத் பண்டிகை. விழாக்கோலம் பூண்டிருக்கும் மனோகரமான காலை நேரம். மரங்களின் அலாதியான அழகுகாட்டும் பசுமை, வயல்களின் கதிர்க்கூட்டத்திலும் தனிப் பொலிவு. வானத்தில் எழிலார்ந்த செம்மை. இன்றைக்கு உதிக்கும் கதிரவன் கூட ரம்மியமாக, குளுமையாக உதித்து, உலகிற்கு ஈத் பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறான். கிராமத்தில் உற்சாகமான கலகலப்பு, ஈத் பண்டிகையையொட்டி தொழுகை நடத்தும் பொதுப் பள்ளிவாசலுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு மிக மகிழ்ச்சி. உபவாசம் இருப்பது பெரியவர்கள் கடன்; மகிழ்ச்சி கொண்டாடுவது சிறுவர்கள் பங்கு. பள்ளிவாசலுக்குப் போய்வருவது திருவிழாவிற்குப் போய் வருவதுபோல, சிறுவர்களுக்கு வீட்டுக் கவலை கிடையாது. எந்தச் சாமான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களுக்குத் தின்பண்டம் கிடைத்தாக வேண்டும்.

எல்லாப் பையன்களையும்விட அதிக மகிழ்ச்சி ஹாமித்திற்கு. ஏழைச் சிறுவன்; ஒல்லியான உருவம்; போன வருடம் அவனுடைய அப்பா காலராவில் காலமாகி விட்டார். பிறகு தாயும் இறந்தாள். ஹாமித் தந்தைவழிப் பாட்டி அமீதாவிடம் வளர்ந்து வந்தான். அவள் மடியில் கிடந்து கதை கேட்பான், மிக மகிழ்ச்சியான தருணம் அது. பாட்டி சொல்லுவாள்; 'உன் அப்பா பணம் சம்பாதிக்க வெளியூர் போயிருக்கிறார். நிறைய சம்பாதித்துக் கொண்டு வருவார். அம்மா அல்லாவின் மாளிகையிலிருந்து நிறைய காணிக்கைகள் கொணரப் போயிருக்கிறாள்.' இப்படிக் கேட்கக் கேட்க, சிறுவன் ஹாமித்திற்குப் பெருமகிழ்ச்சி. நம்பிக்கைதானே பெருந்துணை. அதிலும் குழந்தையின் நம்பிக்கை! சிறுவர்களின் கற்பனை, கடுகை மலையாக்கி விடுகிறது.

ஹாமித்திற்குக் கால்களில் செருப்புக் கிடையாது. பழைய தொப்பி அழுக்கேறியது. அப்படியும் அவன் குதூகலத்துடன் இருக்கிறான். அப்பா பணப்பைகளுடன் வருவார், அம்மா பரிசுப் பொருட்களுடன் வருவாள். அப்போது தன் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். மற்ற நண்பர்களும் அதிசயிப்பார்கள்.

கிழவி அமீதா தன் வறுமை - ஏலாமையை எண்ணி நொந்து கொண்டிருந்தாள். ஈத் பண்டிகைத் திருநாளில் அவள் வீட்டில் உணவுக்கே திண்டாட்டம். மகன் இருந்தால் இப்படியா இருக்கும்? நிராசையும் விசனமும் அவளை இருளாகக் கவிகின்றன. யாருக்கு வேணும் இந்த ஈத் பண்டிகை? யார் அழைத்தது? இந்த வீட்டில் இதற்கு என்ன வேலை? ஆனால், குழந்தை ஹாமித்...

ஹாமித் பாட்டியிடம் வந்து சொல்லுகிறான்: 'அம்மா, நீ பயப்பட வேண்டாம். விழாவிற்குப் போய்விட்டு எல்லாருக்கும் முன்னாலே நான் இங்கே வந்து சேர்ந்து விடுகிறேன். கவலையே படாதே.'

அமீதாவின் உள்ளம் வேதனைப்படுகிறது. கிராமத்துப் பிள்ளைகள் தம் அப்பா - அண்ணன்களோடு ஈத் விழாவிற்குச் செல்லுகிறார்கள். தன் பேரப்பிள்ளைக்கு யார் நாதி?

இங்கே காசு சேகரிக்கத்தான் அலைய வேண்டுமே. கேட்டாலும் கிடைப்பது நிச்சயமில்லை. துணிகள் தைத்துக் கொடுத்ததற்கு அன்று எட்டணா கிடைத்தது. அதை ஈத் பண்டிகைக்காக பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். பால்க்காரி நேற்று வந்த உபத்திரவப்படுத்தினாள். என்ன செய்வது? குழந்தைக்குப் பால்கூட வாங்காமல் என்ன செய்வது? இப்போது இரண்டணாக் காசுதான் கையிருப்பு. இதில் மூன்று காசுகளை ஹாமித்திடம் கொடுத்தாள்; ஐந்து காசுகளை வீட்டுச் செலவுக்கு வைத்துக் கொண்டாள். எல்லாச் சாதி சனங்களும் போகிறார்கள். எல்லாருக்கும் பலகாரம் கொடுத்தாக வேண்டும். கணிசமாகக் கொடுத்தால்தான் மதிப்பு. யாரைத் தவிர்ப்பது? எப்படித் தவிர்க்க முடியும்? வருடத்திற்கு ஒருநாள். இருக்கிற வரைக்கும் நலமாக வாழ வேண்டாமா? குழந்தைக்கு ஆண்டவன் அருள் இருந்தால் நல்ல காலம் பிறக்கும். இந்தக் கஷ்டமெல்லாம் விடியும்.

கிராமத்திலிருந்து விழாக்கூட்டம் புறப்பட்டது. மற்றப் பிள்ளைகளுடன் ஹாமிதும் கிளம்பினான். சில பிள்ளைகள் முன்பே கிளம்பி கிராம எல்லையில் நின்று, தோழர்களுக்காகக் காத்திருந்தார்கள். சிறுவன் ஹாமித்திற்கு அபார உற்சாகம். நண்பர்கள் மெள்ள நடக்கிறார்களே என்று அவனுக்குக் குறை. அவனுக்குக் களைப்பே தோன்றவில்லை. பட்டினத்து எல்லையைக் கண்டதும் உற்சாகம் அதிகரித்தது. சாலைக்கு இரு பக்கங்களிலும் பணக்காரர்களின் தோட்டங்கள். காம்பவுண்டுச் சுவர்களை எழுப்பியிருக்கிறார்கள். மாமரங்கள் காய்த்திருக்கின்றன. ஒரு பையன் சிறு கல்லை எடுத்து மாமரத்தைக் குறி பார்த்து எறிகிறான். தோட்டக்காரன் கூவிக் கொண்டு வெளியே வந்த போது, பிள்ளைகள் ஓட்டம் பிடிக்கிறார்கள். சிரிப்பும் கும்மாளமும் கலகலக்கின்றன. தோட்டக்காரனை முட்டாளாக்கி விட்டதில் பெருமை.

பெரிய பெரிய பங்களாக்கள்; இது கோர்ட்டுக் கச்சேரி, இது காலேஜ், இது ஹோட்டல், இவ்வளவு பெரிய காலேஜில் எத்தனை பிள்ளைகள் படிப்பார்கள்? நிறையப் பேர்கள் படிப்பார்கள். அவர்கள் பிள்ளைகளில்லை; பெரியவர்களாக்கும். நிசம்மா! மீசையெல்லாம் இருக்கும். இன்னும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு என்ன செய்வார்களோ?

பேசிக்கொண்டே போனார்கள். நெருக்கமான வீடுகள். ஈத்பெருவிழாவிற்குச் செல்லும் கும்பல்கள் சாரிசாரியாகப்


படிப்பகம்

www.padippakam.com

போவது தெரிந்தது. என்ன பளபளப்பான ஆடைகள்! தாங்காவில் போகிறார்கள். மோட்டாரில் போகிறார்கள். அத்தர் வாசனை. எல்லார் முகத்திலும் அபார உற்சாகம். கிராமத்திலிருந்து வந்த இந்தக் குழு தன் வறிய நிலையை மறந்து, மகிழ்ச்சியில் திளைத்தவாறு சென்றது. சிறுவர்களுக்குப் பட்டணத்துப் பொருள்கள் யாவுமே அதிசயமாக இருந்தன. புதிய பொருளைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்; பின்னால் ஹார்ன் ஒலி கேட்பதைக் கூடப் பொருட்படுத்தவில்லை. ஹாமித் மோட்டாருக்கெதிரே சிக்கத் தெரிந்தான்; தப்பித்தான்.

• • •

**தொ**ழுகை நிறைவேறியது. ஒருவரையொருவர் தழுவிப் பாசத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். பிறகு கடைகளை நோக்கிக் கூட்டம் படையெடுக்கிறது. கிராமத்துப் பிள்ளைகளும் இந்த விஷயத்தில் அதி உற்சாகிகள்தான்.

''அதோபாருடா! இராட்டினம், தொட்டில் இராட்டினம்! காலணா கொடுத்துவிட்டு ஏறிக் குந்திக் கொள்ளு. ஆகாசத்துக்குத் தூக்கிக் கொண்டு போகும், பிறகு பாதாளத்துக்குக் கொண்டு வரும். மேலேயிருந்து தரையிலே விழுந்துவிடுகிற மாதிரி இருக்கும். இதோ குடை இராட்டினம். மரத்திலே செய்த யானை, குதிரை, ஒட்டகம் எல்லாம் இரும்புக் கம்பியிலே தொங்குகிறதைப் பார்! காலணா கொடுத்துவிட்டுக் குந்து, இருபத்தைந்து சுற்று. படா ஜோர்!''

மஹ்மூத், மொஹ்ஸின், நூரே, ஸம்மீ நால்வரும் அந்த வாகனங்களில் உட்காருகிறார்கள். ஹாமித் விலகி நின்றவாறு வேடிக்கை பார்க்கிறான். அவனிடத்தில் முக்காலணா (இப்போதைய மதிப்பு நாலறை புதுக்காசுகள்) - மூணு காலணாக் காசுகள்தாம் இருக்கின்றன. கொஞ்சநேரம் சுற்றிப் பார்க்கத் தன் பொக்கிஷத்திலிருந்து மூன்றிலொரு பகுதியை இழக்க அவன் விரும்பவில்லை.

தோழர்கள் இராட்டின வாகனங்களிலிருந்து இறங்குகிறார்கள். அடுத்தபடியாக, பொம்மைக் கடை விஜயம். நிறையக் கடைகள். வகை வகையான பொம்மைகள். சிப்பாய், பால்க்காரி, இராஜா, வக்கீல், தண்ணீர் தூக்கி, வண்ணாத்தி, பக்கிரி — ஆஹா! எவ்வளவு இலட்சணமான பொம்மைகள்! நேரே பேசுகிற மாதிரி இருக்குதே! அசல் அச்சு! மஹ்மூத் சிப்பாய் வாங்குகிறான். காக்கி உடுப்பு, சிவப்புக் குல்லா, தோளிலே துப்பாக்கி, கவாயத்துக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்! மொஹ்ஸினுக்குத் தண்ணீர் தூக்கிதான் பிடித்திருக்கிறது. இடுப்பு வளைந்து, முதுகிலே தண்ணீர்ப்பை சுமந்து, பையின் முகப்பை ஒரு கையால் பற்றிக் கொண்டு நிற்கிற பாங்கைப் பார்த்துக் கொண்டே இருக்கலாமே. சிரித்த முகம். ஏதோ பாடுகிறான் போலிருக்கிறது. தோல் பையிலிருந்து தண்ணீரைக் கொட்ட ரெடியாக இருக்கிறான். மொஹ்ஸின் வாங்கி வைத்துக் கொண்டான்.

நூரே வக்கீல் பொம்மையை வாங்கினான். முகத்திலே என்ன பொலிவு! என்ன களை! படித்த மேதை. வெள்ளைக் கோட்டு, கருப்பு மேலங்கி, கோட்டுப் பையிலே தங்கச் செயின் கோத்த கடிகாரம், ஒரு கையிலே சட்டப் புத்தகம். வழக்காடக் கோர்ட்டுக்கு ரெடியாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்! ஒவ்வொரு பொம்மைக்கும் அரையணாத்தான் விலை. ஹாமித் கையிலே முக்காலணாதான் மொத்தம் இருப்பு. இவ்வளவு கிராக்கியான பொம்மையை வாங்க முடியுமா? கைதவறி விழுந்தால் தூள் தூளாகிவிடும். கொஞ்சம் தண்ணீர் பட்டால் போதும், வர்ணமெல்லாம் காலி. இந்தப் பொம்மையை வாங்கி என்ன இலாபம்? உதவாது. ஹாமித் சுயநிர்ணயம் செய்து கொண்டான்.



மொஹ்ஸின் சொல்லுகிறான்: ''என் தண்ணீர்த் தூக்கியைப் பாருங்கடா! தினமும் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பான் — இரண்டு வேளையும்.''

மஹ்மூதின் பெருமை, ''இதோ பார், என் சிப்பாய் எங்க வீட்டிலே பாராக்காவல் இருப்பான். எவனாவது திருடக் கிருட வந்தான்... அவ்வளவுதான், உடனே ஷூட் செய்து விடுவாரு.''

நூரேயின் புகழ்ச்சி, ''என் வக்கீல் சார் பலே ஜோராய் கோர்ட்டிலே வழக்காடுவாரு.''

''என் வண்ணாத்தி தினமும் துணிகளைத் தோய்த்துக் கொடுப்பாளே!'' — ஸம்மீ.

ஹாமிதிற்கு இந்தத் தற்பெருமைகள் பொறுக்கவில்லை. குறை கூறாமல் இருக்க முடியவில்லை. ''எல்லாம் மண் பொம்மைங்க தானே. விழுந்தால் தூள் தூளாகிவிடுமே'' என்கிறான். கூடவே பொம்மைகளை ஆவல் உந்தப் பார்க்கிறான். கையில் வைத்துப் பார்க்க ஆசை. கை நீட்டுகிறான். அவர்களுக்கு மனமில்லை. புதுப் பொம்மை; மோகம் தணியவில்லை. தர மறுக்கிறார்கள். ஹாமித் ஏங்குகிறான்.

பொம்மைக் கடைகளுக்குப் பிறகு இனிப்புக் கடைகள்; ஒவ்வொரு பிள்ளையும் தனக்குப் பிடித்தமான இனிப்பை வாங்குகிறான். சுவைத்துச் சாப்பிடுகிறார்கள்; அகம் மகிழ்கிறார்கள். ஹாமித் கூட்டாளிகளுடன் இருந்தும் ஒதுக்கப்பட்டவனாகிறான். அப்பாவியின் கையில் மூணு காலணாக்கள்தான் இருப்பு. ஏதாவது வாங்கிச் சாப்பிடக் கூடாதா? ஏக்கத்துடன் மற்றவர் முகங்களைப் பார்க்கிறான்.

மொஹ்ஸின் சொல்லுகிறான்: ''ஹாமித்! இந்தா, ரேவடி இனிப்பு வாங்கிக் கொள். என்ன வாசனை! என்ன ருசி!''

படிப்பகம்

www.padippakam.com



ஹாமித்திற்குச் சந்தேகம். இது குரூர மான கிண்டல். மொஹ்ஸின் கருமி. அற்ப மனது. இது தெரிந்தும், ஹாமித் அவன ருகில் போகிறான். மொஹ்ஸின் தொன்னையிலிருந்து ஒரு ரேவடி எடுத்து ஹாமித் எதிரே நீட்டுகிறான். ஹாமித் ஆவ லுடன் கைவிரித்து ஏந்துகிறான். மொஹ்ஸின் ரேவடியைத் தன் வாயில் போட்டுக் கொண்டு விடுகிறான். மற்ற வர்கள் கை தட்டிச் சிரிக்கிறார்கள். ஹாமித் கூசிக் குன்றிப் போகிறான்.

''சரி, இந்தா, இந்தத் தடவை கட்டாயம் கொடுக்கிறேன். அல்லா மீது ஆணை!'' மொஹ்ஸின் அழைக்கிறான்.

ஹாமித் — ''நீயே வைத்துக் கொள். என்னிடத்திலே காசு இல்லையே?''

ஸம்மீ — ''முக்காலணாதானே இருக் கிறது? என்னென்ன வாங்க முடியும்?''

மஹ்மூத் — ''இனிப்பு பெரிய விசய மாக்கும்? இதைப்பற்றி எவ்வளவு குத்தங் குறைகள் புத்தகத்திலே எழுதியிருக்கு, தெரியுமா?''

மொஹ்ஸின் — ''ஆனால், மனசிலே நினைத்துக் கொண்டிருப்பாய், கிடைத்தால் சாப்பிடலாமே என்று. நீ விலைக்கு வாங்கிச் சாப்பிடுவதற்கென்னவாம்?''

மஹ்மூத் — ''எனக்குத் தெரியும் இவ னுடைய தந்திரம். நம் கைக்காசெல்லாம் தீர்ந்து போனதும், நமக்கு ஆசைகாட்டி ஆசைகாட்டி இவரு நல்லா வாங்கிச் சாப்பி டுவாரு!''

இனிப்புக் கடைகள் கடந்தன. இரும்புச் சாமான் கடைகள், கில்ட் நகைக் கடைகள், கிராமத்துப் பிள்ளைகளுக்கு இங்கு கவர்ச்சி இல்லை. மேலே செல்கிறார்கள். ஹாமித் இரும்புக் கடையில் நிற்கிறான். நிறையக் கிடுக்கிகள் பரப்பி வைக்கப்பட்டி ருக்கின்றன. அப்போது நினைவு வந்தது. பாட்டியிடம் சிம்டா இல்லை. பாவம், ரொட்டி சுட்டு எடுக்கும்போது கையைச் சுட்டுக் கொண்டு விடுகிறாள். ஒரு கிடுக்கி வாங்கிக் கொண்டுபோய், பாட்டியிடம் கொடுத்தால்? எவ்வளவு மகிழ்ந்து போவாள்! பிறகு விரல்களைச் சுட்டுக் கொள்ளாமல் இருப்பாள். வீட்டுக்கும் ஒரு உபயோகமான பொருள் சேரும். பொம்மை வாங்கி என்ன லாபம்? காசு வீண். கொஞ்ச நேரத்திற்கு மகிழ்ச்சி. பிறகு? கை தவறினால் சுக்கு-தூள். கிடுக்கி எவ்வளவு நல்ல உபயோகமானது. ரொட்டி எடுக்கலாம். தணல் எடுக்கலாம், அடுப்பைக் கிளறலாம். பாட்டிக்குக் கடைக்குப் போய் வாங்கிவர நேரம் ஏது? காசுதான் ஏது?

என்னிடத்திலே காசு இல்லேன்னு தானே மொஹ்ஸினும் மஹ்மூதும் கேலி செய்யுறாங்க? நானும் இவங்களைக் கேலி செய்யறேன். எனக்குப் பொம்மையும் வேண்டாம். பட்சணமும் வேண்டாம். நான் எதுக்கு மத்தவன் கிண்டலைப் பொறுத்துக் கணும்? நான் ஏழைதான். பிறத்தியாரிடத் திலே பிச்சைக்கு நிற்கல்லையே? என்னைக்காவது ஒருநாள் அப்பா வந்து சேருவாரு. அம்மாவும் வருவாங்க. அப்போது பாரு, இந்தப் பயல்களைப் பார்த்துக் கேட்கிறேன்; ''எத்தனை பொம்மைகள் வேணும் உங்களுக்கு?'' ஒவ்வொரு பயலுக்கும் கூடை கூடையாப் பொம்மைகள் கொடுத்துவிட்டு, ''சிநேகித னிடத்திலே எப்படி நடந்து கொள்ள ணும்னு தெரிந்து கொள்ளுங்க!''ன்னு போதிக்கிறேன். ஒரு காலணாவுக்கு மிட்டாய் வாங்கி, காண்பித்துக் காண்பித்து, ஏமாற்றித் தின்கிறவனா நான்? சரி, எல்லா பயல்களும் நான் கிடுக்கி வாங்கினதுக்காகக் கேலி பண்ணுவானுக; சிரிப்பானுக. சிரிக்கட்டுமே. எனக்கென்ன வந்தது?

ஹாமித் கடைக்காரனிடம் கேட்டான்; 'இந்தக் கிடுக்கி என்னங்க விலை?'

கடைக்காரன் சிறுவனைப் பார்த்தான். கூட எவரையும் காணாது போகவே,

www.padippakam.com

''உனக்குத் தேவையான சாமான் இல்லை இது'' என்றான்.

''விற்பனைக்குத் தானே வைச்சிருக் கீங்க?'' — ஹாமித்.

''விற்காமே சும்மா அழகு பார்க்கவா அடுக்கி வைச்சிருக்கோம்?''

''ஏன் விலையைச் சொல்ல மாட்டேங் கிறீங்க?''

''ஆறு காசுக்கு (ஒண்ணரை அணா) வரும்.''

ஹாமிதிற்கு மனம் இடிந்து போயிற்று. ''சரியாகச் சொல்லுங்கய்யா?'' என்று கெஞ்சினான்.

''கரெக்டா ஒண்ணேகாலணா. வேணும்னா எடு, இல்லை, போய்ச்சேரு!''

ஹாமித் தைரியப்படுத்திக் கொண்டு, 'முக்காலணாவுக்கு வருமா?' என்று கேட்டான். பிறகு அங்கு நிற்கத் துணிவு இல்லாமல் — கடைக்காரன் திட்டுவானோ என்று பயந்து அப்பால் சென்றான், கடைக் காரன் கூப்பிட்டு, கிடுக்கியை அவன் கையில் கொடுத்தான். ஹாமித்திற்கு மகிழ்ச்சி தாளவில்லை. தோளில் அதைச் சார்த்திக் கொண்டு, துப்பாக்கி வீரன்போல் மிடுக்குடன் மேலே நடந்தான். தோழர்கள் என்னதான் சொல்லுறாங்க பார்ப்போமே.

மொஹ்ஸின் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''ஏய் பித்துக்குளி! இந்தக் கிடுக்கியை ஏதுக்கடா வாங்கினே? என்ன செய்வே இதை வைச்சுக்கிட்டு?''

ஹாமித் கிடுக்கியை அலட்சியமாகத் தரையில் எறிந்தான். ''எங்கே, உன் பொம்மையை இது மாதிரி போடு பார்க்கலாம்! எலும்பெல்லாம் முறிஞ்சி போகும்.''

மஹ்மூத் கேட்டான், ''இந்தச் சிம்டா ஒரு பொம்மையா?''

ஹாமித், ''பொம்மையில்லாமே என்ன? தோளிலே வைச்சுக்கோ, துப்பாக்கி! கையிலே வை, பக்கிரி வைச்சுக் கிற சிம்டா! இதைச் சாட்டை மாதிரியும் உப யோகிக்கலாம். இதாலே ஒரு அடி. உங்கள் பொம்மைகளெல்லாம் தூள், தூள்! உங்கள் பொம்மைகள் என்னதான் ஓங்கி அடிக் கட்டும், இவரை அசைச்சுக்க முடியாது. என் வீரச்சிங்கம் 'இந்தச் சிம்டா!''

ஸம்மீக்கு ஆவல் கிளர்ந்தது. ''என் பொம்மையை இதுக்கு மாத்திக் கொள்ளேன்.''

ஹாமித மறுத்துவிட்டான். தன் சிம்டாவின் பிரதாபங்களை வர்ணித்து எதி ராளியின் ஏக்கத்தை அதிகப்படுத்தினான். எல்லாப் பிள்ளைகளும் சிம்டாவின் பெரு மதிப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதற் காக ஏங்கினார்கள். வாங்க ஆசைதான். காசு எங்கே மிஞ்சியிருக்கிறது? மேலும், விழாச் சந்தையைவிட்டு எட்டி வந்து விட்டார்கள். வெயில் சூடுபிடித்தது. வீட்டுக்குப் போகும் அவசரம். அப்பா விடம் அடம் பிடித்தாலும் இனிக் காசு கிடைக்காது. கிடுக்கி எப்படிக் கிடைக்கும்? ஹாமித் படு சாமர்த்தியம். இதற்காகத்தான் காசைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான் போக்கிரிப் பயல்.

பையன்களில் இரு கட்சிகள். மொஹ்ஸின், மஹ்மூத், ஸம்மீ, நூரே நால்வரும் ஒரு பக்கம். ஹாமித் எதிர்ப் பக்கம். வாக்குவாதம் தொடர்கிறது. ஸம்மீ மாறிவிட்டான். எதிர்க் கட்சியில் சேர்ந்து விட்டான். மற்றவர்கள் ஹாமிதைவிடப் பெரியவர்கள். இருந்தாலும், ஹாமிதின் வாதத்திறனுக்கு எதிரே திக்குமுக்காடுகி றார்கள். அவனிடத்தில் நியாயம் - நீதியின் சக்தி இருக்கிறது. ஒரு பக்கம் மண், மறு பக்கம் இரும்பு. இதன் வலிமையே வலிமை! புலியே வந்தாலும் தாக்கி வீழ்த்தி விடும்.

தோற்றவர்களிடமிருந்து வென்றவ னுக்குக் கிடைக்கும் மரியாதை மதிப் பெல்லாம் ஹாமிதிற்குக் கிடைத்தன. மற்ற வர்கள் மூனணா — நாலணா என்று செலவு செய்திருக்கிறார்கள். உபயோக மான ஒன்றுகூட வாங்கவில்லை. ஹாமித் முக்காலணாவில் நிறக்கச் செய்து விட்டான். நிசந்தானே? பொம்மைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதாம்? உடைந்து தூளாகும். ஹாமிதின் பொருள் — சிம்டா வருடக் கணக்கில் இருக்கும்.

சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. மொஹ்ஸின் கோரினான்: ''கொஞ்ச நேரத் திற்கு உன் சிம்டாவைக் கொடு. என் பொம்மையை வாங்கிப் பாரு.''

மற்ற தோழர்களும் இதே கோரிக் கையை வைத்தார்கள்.

ஹாமிதிற்கு இதில் ஆட்சேபணை இல்லை, விருப்பமே. சிம்டா ஒவ்வொரு கையாக மாறியது. அவர்களுடைய பொம்மைகளும் ஹாமித் கைக்கு வந்தன. எவ்வளவு அழகான பொம்மைகள்!

ஹாமித் தோற்றவர்கள் ஆறுதலடை யட்டுமே என்று சொல்லி வைத்தான். ''சும்மா உங்களை அழ வைக்கத்தான் இப்படியெல்லாம் சொன்னேன். இந்தச் சிம்டா பொம்மைக்கு ஈடாகுமா? என்ன அழகான பொம்மை! இப்போதே பேசத் துடிக்கிறாப் போலே இருக்குதே.''

இருந்தாலும், மற்றவருக்கு இதனால் மகிழ்ச்சி ஏற்படவில்லை. சிம்டாவின் செல்வாக்கு திடமாகப் பதிந்திருந்தது.

''இந்தப் பொம்மைக்காக யாரும் எங்களை வாழ்த்த மாட்டாங்களே'' — மொஹ்ஸின் குறைப்பட்டுக் கொண்டான்.

''வாழ்த்துவது கிடக்கட்டும்; அடி விழாமல் இருந்தாலே பெரிது'' — மஹ்மூத் வருந்தினான்.

ஹாமித் இதை ஒப்புக் கொண்டான். மூணு காசுக்குள் அவன் செலவை முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. சிம்டா வாங்கியதில் அவனுக்குப் பெரு மைதான்.

வழியில் மஹ்மூதிற்குப் பசி எடுத்தது. அவன் தந்தை வாழைப் பழம் கொடுத்தார். அவன் ஹாமிதிற்கு மட்டும் பங்கு கொடுத்தான். மற்ற தோழர்கள் ஏக்கத் துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதுவும் அந்தக் கிடுக்கியின் மகிமைதான்.

• • •

பகல் பன்னிரண்டு மணி. கிராமத்தில் கலகலப்பு கிளர்ந்தது விழாச் சந்தைக்குப் போனவர்கள் திரும்பி வந்தார்கள் மொஹ்ஸினின் தங்கை ஓடிவந்து பொம்மையைப் பிடுங்கினாள் கையில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் குதித்தாள் பொம்மை கைதவறி விழுந்தது. தண்ணீர் தூக்கி பரகதி அடைந்தான். இதற் காக அண்ணன் — தங்கைக்கு இடையே அடிதடி ஏற்பட்டது. இருவரும் அழு தார்கள். கூச்சல் கேட்டு வந்த தாய் இருவ ரையும் அடித்தாள்.

நூரேவின் வக்கீல் பொம்மைக்கும் இதே கதிதான். ஆனாலும், அவருடைய தகுதிக்கேற்ப ஆசனம் அமைத்துக் கொடுத் தபின், அமர்த்தி விசிறும்போது கீழே சாய்ந்து முடிவெய்தினார். அங்கும் சோகம் அழுகையாக ஒலித்தது.

மிஞ்சியது மஹ்மூதின் சிப்பாய், வீட்டுக்குப் போனதும், கிராமத்துக் காவல் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். அவன் நடந்து போவானா? பல்லக்கில் புறப்பட்டான். கூடையில் சிவப்புக் கந்தல் துணியை விரித்து, பல்லக்கு உருவாக்கப்பட்டது. நூரே பல்லக்கைச் சுமந்து ஊர்க்காவலுக்குப் புறப்பட்டான். அவன் தம்பி, 'பாரா! உஷார்!' என்று எச்சரிக்கைக் குரல் கொடுத்து வந்தான். மஹ்மூத் கால் தவறிச் சாய்கிறான். கூடைப் பல்லக்கு சரிந்து காவலர் காலனுக்கிரையாகி விடுகிறார். அப்படியும் மஹ்மூத் விடவில்லை. கோந்துபோட்டு ஒட்டி உருவாக்குகிறான். மறுபடியும் நிற்க வைக்கிறான். ஒடிந்த காலில் வலுவில்லை. மறுபடியும் முடமாகி விடுகிறான் சிப்பாய். பிறகு துறவியாகி, உட்கார்ந்த இடத்திலேயே பாராக் கொடுக் கிறார். சில சமயம் சாமியாகிவிடுகிறார்.

www.padippakam.com

இப்படியே பல உருவங்கள் - அவதாரங்கள் எடுத்துக் காட்சி தருகிறார் முன்னாள் சிப்பாய்.

ஹாமிதின் சமாசாரம் அலாதி. பாட்டி அமீதா அவன் குரலைக் கேட்டதுமே ஓடி வருகிறாள். அவனைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுகிறாள். அவன் கையில் கிடுக்கியைப் பார்த்ததும் அதிசயிக்கிறாள்: 'இது ஏது?'

''நான் விலைக்கு வாங்கினேன்.''

''என்ன விலை?''

''முக்காலணா கொடுத்தேன்.''

அமீதா மார்பில் அடித்துக் கொண்டு வேதனைப்பட்டாள். இப்படியொரு புத்தியில்லாத பிள்ளை இருக்குமா? நடுப்பகல் ஆகிவிட்டது. ஒண்ணுமே சாப்பிடாமல் இருப்பானா? என்னடா வாங்கி வந்தானென்றால், ஒரு கிடுக்கி!

''ஏண்டா! விழாச் சந்தை பூராவிலும் உனக்கு வேறெந்த பொருளும் கிடைக்கவில்லையா? இந்த இரும்புக் கிடுக்கிதானா கிடைத்தது?''

ஹாமித் குற்றவுணர்வுடன் சொன்னான்: ''உன் விரல்களெல்லாம் தினமும் ரொட்டி சுடுகிறபோது சுட்டுக் கொள்ளுகிறதே. அதுக்காகத்தான் இதை வாங்கிக் கொண்டு வந்தேன்.''

கிழவியின் கோபமும் வருத்தமும் மறைந்தன. அன்பு திக்குமுக்காடியது. சொற்களால் விவரிக்க இயலாதது. உணர்ச்சி மேலோங்கிய, பாசம் நிறைந்த அன்பு. குழந்தைக்கு எவ்வளவு தியாக உணர்ச்சி, எத்துணை பற்றுதல், எவ்வளவு விவேகம்! பிற பையன்கள் பொம்மைகள் வாங்குவதையும், பட்சணம் வாங்கிச் சாப்பிடுவதையும் பார்த்தும்கூட ஏங்கவில்லையே! மனசு ஆசைப்பட்டிருக்கும். இந்த வயசிலே இவ்வளவு நாவடக்கம் எப்படி ஏற்பட்டது? அங்கேயும் இந்தக் கிழவி பாட்டியின் நினைவு இருந்திருக்கிறதே.

அமீதாவின் உள்ளம் தழுதழுத்துப் போயிற்று.

இப்போது, மிக விசித்திரமான காட்சி மாற்றம் ஏற்பட்டது. ஹாமித் வாங்கிவந்த இந்தக் கிடுக்கியைவிட விசித்திரமானது. குழந்தை ஹாமித் கிழவன் ஹாமிதாக மாறினான். கிழவி சிறுமியானாள். அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். முந்தானையை விரித்து, ஹாமித்திற்காக வேண்டு தலைப் புரிந்தாள், வாழ்த்தி ஆசி கூறினாள், கண்ணீர் பெருக்கினாள்.

ஹாமித் இதன் நுட்பம் தெரியாமல் திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

●

**தொடர் கட்டுரை: 13**

**சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்**

# இராமன்: தேசிய நாயகனா தேசிய வில்லனா?

*கல் - மண்ணால் கட்டப்படும் ஒரு கோவிலுக்காக இந்து போராடவில்லை. அவனுடைய நாகரிகத்தினை, இந்துத் தன்மையினை, தேசிய உணர்வினைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் போராடுகின்றான். ஆனால் முசுலீம்கள் வந்தேறியும் - ஆக்கிரமிப்பாளனும் - கோவிலை இடித்தவனுமான பாபரைப் போற்றுகிறார்கள்; பாரதத்தின் அவதார - தேசிய புருஷனான ஸ்ரீராமரை ஏற்க மறுக்கிறார்கள்.''*

**- பா.ஜ.க. விளையாட்டுத்துறை அமைச்சர் உமாபாரதி, பழைய விஜய பாரதம் இதழில்.**

தங்கள் தொழிலை வளர்ப்பதற்காக கடந்த 15 ஆண்டுகளாக ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் பயன்படுத்தும் மூலதனம் ராமன். ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் மனதை மயக்கும் தேர்ந்த விளம்பர உத்தியைப் போன்று ராமனை முன்வைத்து வரலாறு, பொற்காலம், தேசியம், பெருமிதம், சுதேசி, விதேசி, வந்தேறி என இவர்கள் உருவாக்கிய மோசடிகள் பல. இந்த மோசடிகளே அவர்கள் உருவாக்க விரும்பும் 'இந்து உணர்வுக்கு' அச்சாரம். பாபரும், பாப்ரி மசூதியும், முசுலீம்களும் ஆக்ரமிப்பாளர்கள் - தேசத்துரோகிகள் என்று சதிவலை விரித்து அதன் மேலே ராமன், அயோத்தி, இந்து உணர்வு, தேசிய நாயகன் - நாட்டுப்பற்று என்றொரு மாயத் தோற்றத்தை உருவாக்கி வருகிறார்கள்.

இந்துமதவெறியர்களைப் பொறுத்தவரை இந்தியக் குடியுரிமை பெற்று வாழும் ஒருவர் ராமனை ஏற்பதும், வழிபடுவதும் ஒரு நிபந்தனை. மறுப்பவர்கள் தேசதுரோகிகள். பெரும்பான்மை மக்களிடம் அவர்களே அறியாமல் 'இந்து உணர்வும் - முசுலீம் வெறுப்பும்' விஷம் போல ஊடுருவுவதற்கு 'ராமனின்' மோசடி சித்தரிப்பு ஒரு முக்கியமான காரணம் என்பதை நாம் உணர வேண்டும். அப்படி உணரும்போது இந்த மோசடி அவதாரத்தை வெட்டி வீழ்த்தி வேரறுக்கும் கடமையையும் நாம் ஏற்க வேண்டும்.

70 எம்.எம். திரையில் தேசிய நாயகனாகக் காட்டப்படும் இராமனையும் இந்துப் பொற்காலத்தையும் புரிந்து கொள்ள வேண்டுமெனில் பண்டைய - இடைக்கால - நவீனகால இந்தியாவின் வரலாற்றை - மார்க்சிய அறிவியல் கண்ணோட்டத்துடன் தெரிந்து கொள்வது அவசியம்.

ஆரியர்களின் படையெடுப்பு - நிறவெறி - வர்ண - சாதிவெறி, புராணங்கள் - காப்பியங்கள் - வேத உபநிடதங்கள் சொல்லும் இந்து மதம், தொல்குடி மக்களையும், பண்பாட்டையும் பார்ப்பனியம் கவ்விய வரலாறு, பார்ப்பனியத்தை எதிர்த்து வந்த மதங்கள் - மகான்கள், சமஸ்கிருத மயமாக்கம், மொகலாயர் வருகை, இந்து - முசுலீம் மன்னர்களின் உறவு, போர், ராஜ்ஜியங்களின் வரலாற்றுக் காரணங்கள், வெள்ளையர் வருகை - 47 பிரிவினை என சிந்துசமவெளி நாகரீகம் தொடங்கி இன்று வரை உள்ள வரலாற்றுக் காலத்தைக் கற்றுணர வேண்டும். அதன் பொருட்டு இத்தொடர் கட்டுரை நிறைவுற்றவுடன் 'ஆர்.எஸ்.எஸ்.-இன் வரலாற்றுப் புரட்டல்கள்' என்ற தொடரை வெளியிட இருக்கிறோம்.

இங்கே 'அவதாரம்' இராமன் ஒரு தேசிய நாயகனுக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கிறானா, 'ஆக்கிரமிப்பாளர்' பாபர் ஒரு கொடுங்கோலனாக ஆட்சி நடத்தினாரா என்பதை மட்டும் பரிசீலிப்போம்.

வந்தேறியவர்கள் எல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள் என்று வாதிட்டால் இந்தியாவின் முதல் வந்தேறிகள் ஆரியர்கள்தான். திராவிடர்களையும், நாகர்களையும், இதர பூர்வகுடி மக்களையும் வந்தேறி ஆரியர்கள் வேட்டையாடியதை விவரிக்கும் தொல் கதையே இராமாயணத்தின் மூலம். ஆரிய ஆக்கிரமிப்பின் பெருமிதத்தை விவரிக்கும் அந்த மூலத் தொல்கதை இன்று இல்லை.

பின்னர் சில நூற்றாண்டுகள் கழித்து 'புராண - இதிகாச' காலத்தில் அந்தத்


படிப்பகம்

www.padippakam.com

தொல்கதை ஒரு காப்பியத்துக்குரிய அம்சங்களுடன் வால்மீகி இராமாயணமாக உருப்பெற்றது. அதுவும் வரலாறு நெடுக இடைச்செருகலோடும் திருத்தங்களோடும் மாறிக்கொண்டே வந்தது. கடைசியாக தூர்தர்ஷனில் காட்டப்பட்ட இராமானந்தசாகரின் இராமாயணத்திற்கும், வால்மீகியின் கதைக்கும் மலைக்கும் - மடுவுக்கும் உள்ள வேறுபாடு உள்ளது.

அமெரிக்கா ஆதிக்கம் செய்யும் இன்றைய உலகில் ஹாலிவுட் படங்கள் கூட தமிழில் 'டப்' செய்யப்பட்டு உசிலம்பட்டி போன்ற சிறு நகரங்களில் ஓடுகிறது. அதைப் போல ஆரியர்கள் ஆக்கிரமிப்பு செய்த இந்திய துணைக் கண்டத்தில் இராமாயணமும் எல்லா வட்டார மொழிகளில் இயற்றப்பட்டன. இப்படி ஆரியர்களின் இதிகாசங்களும், புராணங்களும் வேத - உபநிடதக் கருத்துக்களும் இந்திய மொழிகளிலும் ஆடல் - பாடல் கலைகளிலும் ஊடுருவியதன் காரணம் என்ன?

கல்வியும், அறிவும் மறுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கு பார்ப்பனியத்தின் வருண - சாதி 'ஒழுக்கத்தை'க் கற்றுத் தருவதற்கும், வாழ்வதற்கும், கண்காணிப்பதற்கும், மீறினால் தண்டனை கிடைக்கும் என்று எச்சரிப்பதற்கும் அவை பயன்பட்டன.

இப்படி தெற்காசியாவின் பல மொழிகளில் விதவிதமாக இயற்றப்பட்ட எல்லா இராமாயணங்களையும், கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிப் பார்த்தாலும் இராமனின் ஆரியப் பண்பு மட்டும் பெரிதாக மாறவில்லை.

தனது இராஜகுரு வசிஷ்டரின் உத்தரவுக்கேற்ப சூத்திரன் சம்பூகனை வெட்டிக் கொன்றான் இராமன். காரணம் பார்ப்பன புரோகிதர்களின் உதவியின்றி நேரடியாக இறைவனை அறிய சூத்திரன் சம்பூகன் தவம் செய்தான் என்பதே. தமது நிலங்களை ஆக்கிரமிப்பு செய்த விசுவாமித்திரரை எதிர்த்து பழங்குடியினர் போராடுகின்றனர். இராமனோ அசுர பழங்குடியினரைக் கொன்று விசுவாமித்திரரைக் காப்பாற்றுகிறான். போர்க்கலையில் வல்லவனான வாலியை மறைந்து நின்று கொல்கிறான். மனைவி சீதையின் மேல் சந்தேகம் கொண்டு அவளை உயிரோடு கொளுத்திக் கொல்கிறான். இப்படி இந்திய மருமகள்கள் 'ஸ்டவ் வெடித்து சாகடிக்கப்படும் கொடூரத்'தை தொடங்கியவன் இராமன்தான். மொத்தத்தில் இந்திய பூர்வகுடி மக்களையும், இராவணன் போன்ற அவர்களது தலைவர்களையும் வேட்டையாடிய ஆரிய ஆக்கிரமிப்பின் சின்னம்தான் இராமன்.



இன்றைக்கும் தென்னிந்தியா, கிழக்கிந்தியா, வடமேற்கு இந்தியா, வடகிழக்கு இந்தியாவில் வாழும் பெரும்பான்மை மக்களிடம் ராம வழிபாடு கிடையாது. எனவே நிறவெறி, வருணவெறி, சாதி வெறி, இனவெறி, ஆணாதிக்க வெறி என பார்ப்பனியத்தின் பண்புகளைக் கொண்டு உருவெடுத்த இராமனை இந்நாட்டு மக்கள் எவரும் தேசிய நாயகனாக ஏற்க முடியாது. மாறாக தேசிய வில்லனாகத்தான் வெறுக்க முடியும்.

ஒரு பேரரசனாக மாற வேண்டும் என்று எல்லா மன்னர்களும் ஆசைப்படுவதைப் போல மொகலாய மன்னர் பாபரும் விரும்பினார். இராமனின் ஆரியப் பண்புகள் எதையும் பாபரிடம் காண முடியாது. பாபரை ஆதரித்தும், எதிர்த்தும் போரிட்ட மன்னர்களில் இந்துக்களுமுண்டு, முசுலீம்களும் உண்டு. பல போர்களில் பாபருக்கு வெற்றியைத் தந்த இந்து தளபதிகள் அவரிடம் வேலை செய்தனர். ஏராளமான கோவில்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் பாபர் மானியமளித்ததை வரலாறு கூறுகிறது. பாபரின் வரலாற்றைக் கூறும் 'பாபரி நாமா' என்ற அரிய வரலாற்று நூலில் அவர் இந்துக் கோவில்களை இடித்ததாக செய்திகளோ, குறிப்புகளோ இல்லை. ஆபாசம் எனக் கருதி, குவாலியருக்கு அருகே இருந்த நிர்வாண சமணச் சிலைகளை மட்டும் அவர் இடிக்கச் சொன்னதாக அந்த நூல் கூறுகிறது.

**ஒரு பொண்டாட்டியுடன் வாழ்ந்தான் என்ற அரிய சாதனைக்காக ஒருவனை தேசிய நாயகன் ஆக்க வேண்டும் என்றால் அந்த மதம் அல்லது நாட்டின் யோக்கியதையை என்ன வென்பது? பல பெண்டிரைப் புணரும், பெண் வெறி தேச-மாக இந்தியா இருக்கிறது என்பதுதானே அதன் பொருள்!**

அதே நூலில் 11.01.1527 அன்று தனது புதல்வர் ஹுமாயூனுக்கு விட்டுச் சென்ற புகழ்பெற்ற உயிலில் பாபர் பின்வருமாறு கூறுகிறார்:

**"அருமை மகனே! வகை வகையான மதங்களைப் பின்பற்றுபவர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள். இத்தகைய நாட்டின் அரசாட்சியை மன்னாதி மன்னராம் கடவுள் உன்னிடம் ஒப்படைத்ததற்கு நீ நன்றி செலுத்த வேண்டும். ஆகவே நீ பின்வருவனவற்றைக் கடமைகளாக அமைத்துக் கொள்:**

**★ நீ உனது மனதைக் குறுகிய மதவுணர்வுகள், தப்பெண்ணங்கள் பாதிக்க அனுமதிக்கக் கூடாது. மக்களின் எல்லா பிரிவினர்களும் பின்பற்றுகின்ற மதசம்பந்தமான மென்மையான உணர்ச்சிகளுக்கும் மதப்பழக்கங்களுக்கும் நீ உரிய மதிப்புக் கொடுத்து பாரபட்சமற்ற முறையில் நீதி வழங்க வேண்டும்.**

**★ நீ மற்ற சமூகத்தினரின் வழிபாட்டுத் தலங்களை ஒரு போதும் இடித்துச் சேதப்படுத்தக் கூடாது. நீ எப்போதும் நியாயத்தை நேசிப்பவனாக விளங்க வேண்டும். இதனால் மன்னருக்கும் மக்களுக்குமிடையே சுமுகமான இனிய உறவு நிலவ முடியும். அப்போதுதான் அமைதியும் திருப்தி உணர்வும் நிலை பெறும்.''**

இந்துமதவெறியர்களின் இன்றைய விஷம் கக்கும் வெறிப் பேச்சையும், 500 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு மன்னனின் நல்லிணக்கத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்; பாபருக்கும், இராமன் மற்றும் அவனுடைய வாரிசுகளுக்கும் உள்ள யோக்கியதை என்ன என்பது தெரிய வரும். பாபரின் இந்த உயில் பார்ப்பனியத்தின் புராணப் புரட்டல்ல, மறுக்க முடியாத ஓர் வரலாற்று ஆவணமாகும்.

மகனுக்கு விட்டுச் செல்லும் உயிலில் அந்த மன்னன் பொய் எழுதத் தேவையில்லை. ஒருவேளை பாபரி மசூதி இருந்த

படிப்பகம்

www.padippakam.com



**சூத்திரன் சம்புகனை வெட்டிக் கொன்ற இராமன் நிறவெறி, வருணவெறி, சாதிவெறி, இனவெறி, ஆணாதிக்க வெறி ஆகிய பார்ப்பனியப் பண்புகளால் உருவெடுத்தவனே அன்றி வேறல்ல.**

இடத்தில் ராமர் கோவில் இருந்து அதை இடித்திருந்தால் மறைக்க வேண்டிய அவசியமும் பேரரசனான பாபருக்கு அன்று இல்லை. இருபதாம் நூற்றாண்டில் ஆர்.எஸ்.எஸ். எனும் கிறுக்குக் கூட்டம் தன்மீது குற்றம் சாட்டும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவும் வாய்ப்பில்லை. பார்ப்பன ரிஷிகளுக்கு உள்ள ஞான திருஷ்டி பாபருக்குத்தான் கிடையாதே!

என்றாலும் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் பாபர் மற்றும் ஏனைய முகலாய மன்னர்களைப் பற்றி உருவாக்கியுள்ள பொய்களும், கட்டுக் கதைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. அவை பற்றி 'வரலாற்றுப் புரட்டல்' தொடர் கட்டுரையில் பார்க்கலாம். பாபருக்குப் பின்வந்த அக்பர் மதங்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்தார். தன் கால மதங்களில் தனக்குத் தெரிந்த நல்ல அம்சங்களை இணைத்து அவர் உருவாக்கிய 'தீன் இலாஹி' எனும் புதிய மதம் தோல்வியுற்றாலும் அக்காலத்தில் அது ஒரு முற்போக்கான முயற்சியாகும். பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்பு இருப்பினும், சதி எனும் உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை அக்பர் தடை செய்தார். இதை அவரது வரலாறு கூறும் 'அயினி அக்பர்' நூல் தெரிவிக்கின்றது.

பொதுவாகப் பரிசீலிக்கும் போது எல்லா மன்னர்களையும் போல முகலாய மன்னர்களும் சுக போகிகளாக, சுரண்டல் பேர்வழிகளாக இருந்திருக்கிறார்கள். ஆயினும் ஆட்சியிலும், சமூக நோக்கிலும் இராமனைக் காட்டிலும் முன்னுதாரணமானவர்களாகவே இருந்தனர்.

மனிதகுல வரலாற்றில் 'தேசிய நாயகர்கள்' என்று போற்றப்படும் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தத்தமது கால மாற்றத்தையும் மக்கள் போராட்டங்களையும் புரிந்து கொண்டு பங்கெடுத்தும், முன்னெடுத்தும் சென்றிருக்கிறார்கள். வரலாற்றில் இத்தகைய தனித் தலைவர்களின் பங்கு முதன்மையானது இல்லையென்றாலும், முக்கியமானதுதான்.

தமது அடிமைத்தனத்தையே உணராத ரோமாபுரி அடிமைகளை அணிதிரட்டி போராடச் செய்த ஸ்பார்ட்டகஸ், அடிமைகளின் ஏக்கத்தைப் போக்கப் போராடிய ஏசு கிறிஸ்து, அரேபிய நாடோடி இன மக்களை நெறிப்படுத்திய முகமது நபி, பார்ப்பனியத்தின் கொடூரச் சடங்குகளுக்கு விடை தேடிய புத்தர், இத்தாலியை ஒன்றுபடுத்துவதற்காகப் போராடிய கரிபால்டி, இங்கிலாந்து தொழிலாளர் இயக்கத்தின் தந்தையெனப் போற்றப்படும் ராபர்ட் ஓவன், முதலாளித்துவ ஜனநாயகக் கூறுகளை வழங்கிய பிரெஞ்சுப் புரட்சி தலைவர்கள், அமெரிக்க விடுதலைக்கு தலைமை தாங்கிய ஜார்ஜ் வாஷிங்டன், நிறவெறியை எதிர்த்து அமெரிக்க உள்நாட்டு போர் கண்ட ஆப்ரகாம் லிங்கன், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை சாகும் வரை எதிர்த்துப் போராடிய சே குவேரா, மதவாதிகளின் பிடியிலிருந்து துருக்கியை விடுவித்த கமால்பாஷா, வெள்ளை நிறவெறியை எதிர்த்து தன் இளமையை சிறையில் கழித்த நெல்சன் மண்டேலா, காலனிய எதிர்ப்பில் இந்திய இளைஞர்களிடம் புது ரத்தம் பாய்ச்சிய பகத்சிங், கீழத்தஞ்சையின் கூலி விவசாயிகளை போராடச் செய்த சீனிவாசராவ் மற்றும் அம்பேத்கர், பெரியார் போன்ற தலைவர்களையெல்லாம் அந்தந்த நாட்டு, மத, இன மக்கள் கொண்டாடுகிறார்கள்.

மனிதகுலம் எதிர்காலத்தில் பொதுவுடைமை சமூகமாக மாறுவதற்கு வழிகண்ட மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரை அன்போடு மார்க்சிய பேராசான்கள் என்று கம்யூனிஸ்டுகள் கொண்டாடுகின்றனர். இப்படி வரலாறு நெடுகிலும் இன, தேசிய, மத, ஜனநாயக, புரட்சிகரத் தலைவர்களை மனிதகுலம் உருவாக்கியிருக்கிறது.

ஆனால் இந்துமதவெறியர்கள் கட்டளையிட்டு தேசிய நாயகனாய்ப் போற்றச் சொல்லும் இராமனிடம் என்ன இருக்கிறது? முதலில் இராமாயணம் ஒரு வரலாற்று உண்மையல்ல. ஒரு வேளை இராமனின் கதை உண்மையென்றே வைத்துக் கொண்டாலும், அவன் செய்த அபூர்வ செயல்கள் என்ன? தந்தையின் வாக்கைக் காப்பாற்ற, சித்தியின் பேச்சைக் கேட்டு காட்டுக்குப் போனான். திரும்பி வரும்வரை தம்பியை ஆளச் செய்தான். தொலைந்து போன மனைவியை மீட்க மாபெரும் போரை நடத்தினான். மீண்டும் அயோத்தியை ஆண்டான்.

இருப்பினும் பல்வேறு இராமாயணங்கள், இராம பக்தர்கள், உபன்யாசகர்கள், ஆர்.எஸ்.எஸ். கும்பல் அனைவருமே புகழ்ந்துரைக்கும் ராமனின் மாபெரும் பெருமை என்னவென்றால், அவன் ஏகபத்தினி விரதன் என்பதுதான். போகட்டும், அதையும் உண்மையென்றே ஏற்போம். ஒரு பொண்டாட்டியுடன் வாழ்ந்தான் என்ற அரிய சாதனைக்காக ஒருவனை தேசிய நாயகன் ஆக்க வேண்டும் என்றால் அந்த மதம் அல்லது நாட்டின் யோக்கியதையை என்னவென்பது? பல பெண்டிரைப் புணரும், பெண் வெறி தேசமாக இந்தியா இருக்கிறது என்பதுதானே அதன் பொருள்!

ஆகையினால் இராமனைப் பற்றி புகழ்ந்துரைக்கப்படும் தேசிய - அவதாரக் கதைகளை எதிர்த்து முறியடிப்பது என்பது பார்ப்பன இந்து மதத்தின் சமூக அமைப்பை எதிர்த்துப் போராடும் விடுதலைப் போராட்டமே அன்றி வெறும் நாத்திகப் பிரச்சாரமல்ல. இராமன் தேசிய நாயகனல்ல; தேசிய வில்லன்!

**— தொடரும்**


படிப்பகம்

www.padippakam.com

மார்ச் 23
பகத்சிங்
நினைவு
நாளில்
அணி
திரள்வோம்

ஒழிக அமெரிக்க மோகம்!  ஓங்குக நாட்டுப்பற்று!!



விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின்

# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடு

## மார்ச் 23, 24 - கோவை

***அன்பார்ந்த தொழிலாளர்களே, விவசாயிகளே, தேசிய முதலாளிகளே, ஆசிரியர்களே, அரசு ஊழியர்களே, மாணவர்களே, இளைஞர்களே!***

நில நடுக்கம் தோற்றுவிக்கும் அழிவைக் காட்டிலும் கொடிய பேரழிவை நம் நாட்டின் விவசாயமும் தொழில்களும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

காட் ஒப்பந்தப்படி ஏப்ரல் -1, 2001 முதல் தீப்பெட்டி, உணவு தானியங்கள், உள்ளாடை, ஊறுகாய் மட்டை உள்ளிட்ட 1429 பொருட்களை, அளவுரீதியான கட்டுப்பாடுகள் ஏதுமின்றித் தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதித்து, நாட்டையே பர்மா பஜாராக்கப் போகிறது பாரதீய ஜனதா அரசு. இதன் விளைவாக நம் நாட்டின் சிறு தொழில்கள் விவசாயம் ஆகிய அனைத்தும் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட இருக்கின்றன.

'இது நம் நாட்டையே அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்குக் காலனி - அடிமை நாடாக மாற்றும் பாதை' என நாங்கள் கூறுகிறோம். அன்று நடந்தது கும்பினி ஆட்சி - இன்று நடப்பது பன்னாட்டு கம்பெனி ஆட்சி என்கிறோம். சிந்தித்துப் பாருங்கள்.....

அன்று நம் மக்கள் காய்ச்சிய உப்புக்கு வரி விதித்தது பிரிட்டிஷ் அரசு. இன்றோ பொய்யான மருத்துவக் காரணங்களைச் சொல்லி தூத்துக்குடி, வேதாரணியம் உப்பை தடை செய்ய முயல்கின்றன பன்னாட்டுக் கம்பெனிகள்.

அன்று அந்நியத் துணிகளை எரிக்கும் போராட்டம் நடந்தது. இன்றோ அமெரிக்காவின் ஆயத்த ஆடைகளை இறக்குமதி செய்வதற்காகவே நம் துணி ஆலைகளும், விசைத்தறியும், கைத்தறியும் ஒழிக்கப்படுகின்றன.

நெசவுக்கு நூலின்றி கைத்தறிகள் அழிகின்றன; பஞ்சு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கோவை, ஈரோடு, பள்ளிப் பாளையம், சேலம், மதுரை போன்ற பகுதிகளிலுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்களும், நெசவாளர்களும் வேலை இழந்துள்ளனர்.

அன்று சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கினார் வ.உ.சி. இன்றோ அரசுத் துறைக் கப்பல் நிறுவனமும், துறைமுகங்களுமே அந்நியனுக்கு விற்கப்படுகின்றன.

தேயிலை, தேங்காய், சர்க்கரை, பால் பவுடர், கோழிக்கறி, ரப்பர், உணவு தானியங்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. மீன்பிடித்தல், தீப்பெட்டி தயாரிப்பு உள்ளிட்ட அனைத்திலும் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைகின்றன.

ஆனால் அன்றைக்கும் இன்றைக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. தான் கொள்ளையடிப்பதற்காக பிரிட்டிஷ் அரசு போட்ட இருப்புப் பாதையையும், கையாட்களைத் தயாரிக்க அமைத்த கல்வி நிலையங்களையும் காட்டி 'வெள்ளைக்காரன் இந்தியாவை முன்னேற்றுகிறான் என்று பேசியவர்கள் அன்று எதிரியின் எடுபிடிகள்' என அழைக்கப்பட்டார்கள். இன்றோ 'பன்னாட்டு நிறுவனங்கள் வந்தால்தான் நாடு முன்னேறும்' என்று அரசே பிரச்சாரம் செய்கிறது.

அன்றைய கும்பினி ஆட்சியைவிடக் கொடியது இன்றைய பன்னாட்டுக் கம்பெனி ஆட்சி. கச்சாப் பொருட்களையும் கனிவளங்களையும் கொள்ளையடித்தது கிழக்கிந்தியக் கம்பெனி. பன்னாட்டுக் கம்பெனிகளோ பங்குச் சந்தை முதல் பலசரக்குக் கடைகள் வரை அனைத்தையும் விழுங்குகின்றன. குடிநீர், உணவு, உடை, பண்பாடு.. என நம் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமிக்கின்றன.

எனினும் இந்தப் பன்னாட்டு நிறுவனங்களை முறியடிப்பதொன்றும் முடியாத காரியமல்ல. பொதுத்துறை ஊழியர்கள், வேலையிழந்த தொழிலாளர்கள், கரும்பு - தென்னை தேயிலை விவசாயிகள், வணிகர்கள், சிறு தொழில் முனைவோர், மீனவர்கள், வேலை கிடைக்காத இளைஞர்கள்... என்று பல்வேறு தரப்பினரும் நாடெங்கிலும் போராடத் தொடங்கி விட்டனர்.

மக்களுடைய கோபத்தையும் அதிருப்தியையும் திசைதிருப்பி, தமக்குச் சாதகமான ஓட்டுக்களாக மாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் பல்வேறு கட்சிகளும் இதில் தலையிடுகின்றனர்; காட் ஒப்பந்தத்தை ரத்து செய்யாமலேயே, உலக வர்த்தகக் கழகத்திலிருந்து வெளியேறாமலேயே சில சலுகைகளைப் பெறுவதன் மூலம் பிரச்சினையைத் தீர்த்துவிடலாமென விவசாயிகளையும், தொழிலாளர்களையும், தேசிய முதலாளிகளையும் ஏமாற்றுகின்றனர்.

ஆனால் இப்பிரச்சினைகள் அனைத்திற்கும் மூலகாரணம் மறுகாலனியாக்கம் தான். அனைவருக்கும் பொது எதிரி பன்னாட்டுக் கம்பெனிகளும் அவர்களுடைய கையாட்களான இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள், அதிகார வர்க்கத்தினர் மற்றும் இக்கட்சியினர்தான். இவர்களுக்கெதிரான, நாட்டை மீண்டும் அடிமையாக்கும் சதிக்கு எதிரான ஒரு விடுதலை இயக்கமாக நமது போராட்டங்கள் அனைத்தையும் நாம் ஒருமுகப்படுத்த வேண்டும். வேறுபாடுகளைக் கடந்து நாம் ஓரணியில் திரள வேண்டிய நேரமிது.

அடிமைத் தளையிலிருந்து இந்த நாட்டை விடுவிக்காமல் நமது தொழிலை, வேலையை, வாழ்க்கையை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியாது. தம் அரசாட்சியையும், பதவியையும், உயிரையும்கூடத் துச்சமாக மதித்து விடுதலைக்குப் போராடிய கட்டபொம்மன், மருது, திப்பு சுல்தான், வ.உ.சி., பகத்சிங் போன்ற எண்ணற்ற தியாகிகள் வாழ்ந்த நாடு இது. அவர்களின் கனவை நனவாக்குவோம்!

நாட்டுப்பற்று கொண்டோரே மாநாட்டுக்கு வாருங்கள்! காட்-டாட்சிக்கெதிரான போராட்டத்தைத் துவக்குவோம்! மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டத்தைத் துவக்குவோம்!

**இவண்**

***மக்கள் கலை இலக்கியக் கழகம்***
***விவசாயிகள் விடுதலை முன்னணி***
***புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி***
***புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி***

**தொடர்புக்கு:**

*இரா. சீனிவாசன்,*
*எண். 3, நான்காவது தெரு, செகந்நாதபுரம்,*
*சேத்துப்பட்டு, சென்னை - 600 003 .*

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 3, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42647/87

Regd. No. TN/Chief PMG-303 / 20

www.padippakam.com

## நமது பாடல் மீண்டும் எழும்!

நமது தேசம் வலிமையானது
நமது தேசம் இளமையானது
அவளது
மகோன்னதமான பாடல்கள்
இன்னும் இசைக்கப்படவே இல்லை

ஏமாற்றுதலிலிருந்து
வெற்றுக் கூச்சலிலிருந்து
கொலைகாரர்களிடமிருந்து
கொலைத் தண்டனைகளிலிருந்து
மக்கட் பதடிகளிடமிருந்து
தேசபக்திப் பஜனைகளிலிருந்து
நிச்சயமின்மையிலிருந்து
சந்தேகத்திலிருந்து

நமது பாடல்
விடுபட்டு மீண்டும் வரும்....

நமது பயணப் பாடல்
விடுபட்டு மீண்டும் வரும்

பழகுதற்கினியதோர்
ராகத்தைப் போல
எளிமை மிக்கதாக

நமது பள்ளத்தாக்குகளைப் போல
ஆழமிக்கதாக

நமது மலைகளைப் போல
உயர்வானதாக.

இதை இயற்றிய
மக்களைப் போல
உறுதி மிக்கதாக

நமது பாடல் மீண்டும் எழும்

*— இங்கிலாந்து — பர்மிங்காம்
தொழிலாளிகளுடைய
கிளாரியன் இசைக்குழுவின் பாடல்.*




படிப்பகம்